1119

1453

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 FEB 194
MADRAS

BHARATI

# NEW METHOD READER

## THIRD READER

P. N. CHIDAMBARA MUDALIAR BROS.,
MADRAS. MADURA. TINNEVELLY Jn.

# பாரதி

# புதுமுறை வாசகம்

## மூன்றாம் பாடம்

நூலாசிரியர் :

**அ. கி. பரந்தாமனார்,**

தலைமைத் தமிழாசிரியர், திருப்பவுற் கலாசாலை,

வேப்பேரி, சென்னை.

1459

1482

4948 11 86

**பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்**

மதராஸ் :: மதுரை :: திருநெல்வேலி ஜங்ஷன்

பதிப்புரிமை] 1939 [விலை அணா 5.

# முகவுரை

நமது நாட்டுச் சிறுவர்கள் எளிதில் கற்குமாறு அரசாங்க பாடத் திட்டத்தைத் தழுவிப் புதுமுறையில் இவ்வாசக வரிசை நூல்கள் எழுதப்பட்டுள்ளன. இனிய கதைகளும் அறிவுதரும் பலவகைப் பாடங்களும் புது வகையான பாட்டுகளும் இவ் வரிசை நூல்களில் இடம் பெற்றுள்ளன. மேல் வகுப்பில் வரும்போது மாணவர்களிடம் காணும் குறைகளை மனத்தில் வைத்துக்கொண்டு அக்குறைகளை நீக்குதற்கு உரிய பயிற்சிகளை இங்குக் கொடுத்துள்ளேன். பயிற்சிகள் பேராசைப் பயிற்சிகளாயில்லாமல் கூடியமட்டும் மாணவ மாணவி நிலைக்கும் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர் நிலைக்கும் ஏற்றனவாய் இருக்கும். சிறுவர்கள் இவ்வரிசை நூல்களைப் பயின்றால் அவர்கள் தமிழ்மேல் அன்பும் தமிழறிவும் பொது அறிவும் பெறுவார்கள் என்பது திண்ணம்.

இந்நூல் வெளிவருதற்கு வேண்டிய உதவியளித்த பிரம சமாஜப் பள்ளிக்கூட ஆசிரியர் திரு. T. ஞான சுந்தரனார் அவர்களுக்கும், வித்வான் திரு. S. சங்கரலிங்க முதலியார் அவர்களுக்கும் என் நன்றி உரியதாகும்.

பள்ளிக்கூட அதிகாரிகளும் ஆசிரியர்களும் இவ் வரிசை நூல்களுக்கு ஆதரவு அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

தமிழகம்
முத்துமுதலி தெரு,
புரசை, சென்னை.
12-11-1939.

இங்ஙனம்,
குழந்தைகளின் தொண்டன்,
**அ. கி. பரந்தாமன்.**

# பொருளடக்கம்


| பாடம் எண் | | பக்கம் எண் |
|---|---|---|
| 2. | படங்கள் | |
| 1. | என் குடும்பம் | 1 |
| 2. | கோமாளி கிருஷ்ணன் | 6 |
| 3. | கங்குவின் பிறந்தநாள் | 11 |
| 4. | தபால் கடிதத்தின் சரித்திரம் | 18 |
| 5. | பனைமரம் | 21 |
| 6. | பொதுஜன ஊழியர்கள் | 24 |
| 7. | ஈ | 31 |
| 8. | வாத்தும் நரியும் | 37 |
| 9. | கடிகாரம் பார்த்தல் | 41 |
| 10. | வீதியில் செல்வது | 46 |
| 11. | தன் கையே தனக்கு உதவி | 51 |
| 12. | தேசபந்து சித்தரஞ்சன தாசர் | 56 |
| 13. | நமது தலை நகரம் | 61 |
| 14. | நல்ல மளிகைக் கடை | 68 |
| 15. | சென்னை பேசுகிறது | 73 |
| 16. | காகம் | 79 |
| 17. | முத்து வேலைக்குப் போதல் | 83 |
| 18. | பயிர்த் தொழில் | 86 |
| 19. | நெற்பயிர் | 90 |
| 20. | கிறிஸ்துஜயந்தி | 92 |
| 21. | திரும்பி வந்தான் (நாடகம்) | 98 |
| | செய்யுள் | 105-112 |



# உதயம்

காவெனக் காகம்
கரைவதைக் கேட்பாய்.
கதிரவன் குணதிசை
காண்பதைப் பார்ப்பாய்.

வாவியில் தாமரை
மலர்வதைப் பார்ப்பாய்.
வானமும் செந்நிற
மானதைக் காண்பாய்.

காவினில் வண்டுகள்
மலர்தோறுந் தேனைக்
கண்டு களிப்பதை
உண்பதைப் பார்ப்பாய்.

பாவையர் புனல்விளை
யாடலைக் காண்பாய்.
படுக்கைவிட் டெழுந்திரு
பகவனைத் தொழுவோம்.



## பயிற்சி




ஒவ்வொரு படத்துக்கும் ஒவ்வொரு வாக்கியம் எழுது.

## பயிற்சி




ஒவ்வொரு படத்துக்கும் ஒவ்வொரு வாக்கியம் எழுது.

## பயிற்சி




ஒவ்வொரு படத்துக்கும் ஒவ்வொரு வாக்கியம் எழுது.



# 1. என் குடும்பம்

| | | |
|---|---|---|
| சௌக்கியம் | சகோதரர்கள் | தமிழ்ப்பண்டிதர் |
| வணக்கம் | மற்றொருவர் | தமிழ்ப்பண்டிதை |
| திருவாளர் | தொழிற்சாலை | முன்னுக்கு |
| பௌத்திரன் | இஞ்சினியர் | தேகப்பயிற்சி |
| பாட்டனார் | மருத்துவசாலை | கலாசாலை |
| ஐயா | வைத்தியர் | உபாத்தியாயினி |

**உபாத்தியாயர்**—தம்பி, சௌக்கியமா?

**பழனிச்சாமி**—ஐயா, வணக்கம். சௌக்கியமா யிருக்கிறேன்.

2—C,

உபாத்தியாயர்—நீ திருவாளர் மாணிக்கம் அவர்களுடைய பௌத்திரனா?

பழனிச்சாமி—ஆம், ஐயா. அவர் என் பாட்டனார்.

உபாத்தியாயர்—உன் பெயர் என்ன?

பழனிச்சாமி—என் பெயர் பழனிச்சாமி.

உபாத்தியாயர்—உனக்கு வயது என்ன?

பழனிச்சாமி—எனக்கு வயது எட்டு, ஐயா.

உபாத்தியாயர்—உனக்கு எத்தனை சகோதரர்கள்? எத்தனை சகோதரிகள்?

பழனிச்சாமி—எனக்கு இரு சகோதரர்களும் மூன்று சகோதரிகளும் உண்டு.

உபாத்தியாயர்—அவர்கள் என்ன செய்கிறார்கள்?

பழனிச்சாமி—ஒரு சகோதரர் பி. ஏ. படித்துவிட்டு உபாத்தியாயராய் இருக்கிறார். மற்றொருவர் டாட்டா இரும்புத் தொழிற்சாலையில் இஞ்சினியராக இருக்கிறார். பெரிய சகோதரி சென்னை மருத்துவ சாலையில் வைத்தியராய் இருக்கிறார். இரண்டாவது சகோதரி தமிழ்ப்பண்டிதையாய் வெலிங்டன் பெண்கள் கலாசாலையில் வேலை செய்கிறார். மூன்றாவது சகோதரி வார்தாப்பயிற்சி முறைப் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயினியாய் இருக்கிறார். நான் ஒருவன்தான் சிறுவகுப்பில் படிக்கிறேன்.

உபாத்தியாயர்—தம்பி, உன் குடும்பம் நல்ல குடும்பம்; படித்த குடும்பம். உங்கள் குடும்பத்தில் உன் சகோதரிகள் எல்லாரும் படித்திருப்பது மிகவும் நல்லது. நீயும் படித்து முன்னுக்கு வரவேண்டும். நீ உன் குடும்பத்தின் மதிப்பைப் பாதுகாக்கவேண்டும். நீ செய்வாயா?

பழனிச்சாமி—அப்படியே செய்கிறேன், ஐயா.

உபாத்தியாயர்—தேகப் பயிற்சிசெய்து உடம்பையும் பலப்படுத்திக்கொள்ள வேண்டும்; படிப்பையும் கவனிக்கவேண்டும்.

பழனிச்சாமி—ஐயா, அப்படியே செய்கிறேன், வந்தனம்.

கேள்விகள்

(1) உன் பெயர் என்ன?

(2) உன் தெருவின் பெயர் என்ன?

(3) உன் வீட்டுக் கதவின் எண் என்ன?

(4) உன் தகப்பனருக்கு என்ன வேலை?

(5) நீ உன் நண்பன் குடும்பத்தைப்பற்றி விசாரித்துப் பத்துக் கேள்விகளும் அவைகளுக்கு விடையும் எழுது.

(6) பெரியோர்களை மரியாதையாகக் கேட்கும் கேள்விகள் நான்கு எழுது.

எதிர் வார்த்தை

சௌக்கியம் × அசௌக்கியம்

(1) கீழ்க்காணும் எழுத்துக்கள் உள்ள இரண்டு இரண்டு சொற்கள் எழுது:—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ரா | ரோ | லை | ணா | ணை | ணோ |
| (1) | (1) | (1) | (1) | (1) | (1) |
| (2) | (2) | (2) | (2) | (2) | (2) |
| றா | றோ | ளை | னா | னை | னோ |
| (1) | (1) | (1) | (1) | (1) | (1) |
| (2) | (2) | (2) | (2) | (2) | (2) |

(2) கீழ்க்கண்ட எழுத்துக்களை உச்சரிக்கும்போது கண்ணாடி பார்த்து நா மடிவதை நன்றாய்க் கவனி:—

| | | |
|---|---|---|
| ந | ன | ண |
| ர | ற | — |
| ல | ள | ழ |

கீழ்க்கண்ட சொற்களை நன்றாய்ப் படித்துப் பார்:—

(3) 1.

| | | |
|---|---|---|
| நகம் | மன்னர் | அண்ணன் |
| நாய் | சொன்னர் | கிண்ணம் |
| நாங்கள் | பொன்னேரி | தண்ணீர் |

2.

| | |
|---|---|
| அரம் | முறம் |
| ஆரம் | பறவை |
| நேரம் | குறவர் |

3.

| | | |
|---|---|---|
| மழமழ | மளமள | பலபல |
| வழவழ | களகள | சிலசில |
| தழதழ | தளதள | கலகல |

(4) கீழே விடப்பட்ட இடங்களில் ஏற்ற எழுத்தைப் போடு:—

| | | |
|---|---|---|
| பவ—ம் | அப்ப—ம் | ப—கை |
| உ—வர் | மத்த—ம் | ப—ப்பம் |
| அ—கு | மே—ம் | கா—ம் |
| க—னி | இ—நீர் | செ—வு |



## 2. கோமாளி கிருஷ்ணன்

| | |
|---|---|
| வருத்தி | இறங்கினன் |
| கோமாளி | ஜாக்கிரதை |
| தூக்கம் | சிரித்தாள் |
| மெதுவாக | விழுந்து |

கிருஷ்ணன் ஒரு நாள் தன்னுடைய அம்மாவை வருத்திக்கொண்டிருந்தான். அவன் கதை சொல்லும்படிகேட்டான். தாய் தன் புருஷனைப்பார்த்து, "குழந்தைக்குத் தூக்கம் வருகிறது. குழந்தையை மெத்தை

மேல் அழைத்துக்கொண்டுபோய்த் தூங்கவையுங்கள்” என்று சொன்னாள்.

தகப்பனார் குழந்தையை மாடியின்மேல் அழைத்துக்கொண்டு போனார். அவர் குழந்தையோடு படுத்துக்கொண்டிருந்தார். கிருஷ்ணன், “கதை சொல்லுங்கள்” என்று கேட்டான். தகப்பனார் கதை சொல்லிக்கொண்டே தூங்கிவிட்டார்.

கிருஷ்ணன் மெதுவாக இறங்கிக்கொண்டிருந்தான். தாய் யாரோ இறங்கிவரும் சத்தத்தைக் கேட்டாள். அவள், “குழந்தை தூங்குகிறது; சத்தம் செய்யாமல் இறங்கி வாருங்கள்; குழந்தை விழித்துக் கொள்ளும்; ஜாக்கிரதை” என்று மெதுவாகச் சொன்னாள்.

கிருஷ்ணன், “அம்மா, அப்பா தூங்குகிறார்; சத்தம் போடாதே. அப்பா எழுந்து வருவார்” என்றான். தாயார் கிருஷ்ணன் சொன்னதைக்கேட்டு விழுந்து விழுந்து சிரித்தாள்.

கேள்விகள்

(1) கோமாளி கிருஷ்ணன் செய்த வேடிக்கை என்ன?

(2) கிருஷ்ணன் செய்ததைப்பற்றி மூன்று வாக்கியங்கள் எழுது.

எதிர் வார்த்தைகள்

இறங்கி × ஏறி

மெதுவாக × வேகமாக

பயிற்சி

(1) மெதுவாக, வேகமாக, ஏறினன், இறங்கினள் — ஒவ்வொரு வார்த்தையையும் உபயோகித்து ஒவ்வொரு வாக்கியம் எழுது.

(2) பெயரைக் குறிப்பது பெயர்ச்சொல். நீ வகுப்பில் பார்க்கும் நான்கு பொருள்களின் பெயர்களைச் சொல்.

(3) கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள பெயர்களை மாத்திரம் எடுத்து எழுது:—

(1) நாய் வீட்டைப் பாதுகாக்கிறது.

(2) இராமன் மேஜைமேல் புத்தகம் வைத்தான்.

(3) செம்படவன் மீன் பிடிக்கிறான்.

(4) பழங்கள் உடம்புக்குச் சுகம் தரும்.

பயிற்சி

| ஆண்பால் | | பெண்பால் |
|---|---|---|
| சகோதரன் | — | சகோதரி |
| பௌத்திரன் | — | பௌத்திரி |
| பண்டிதன் | — | பண்டிதை |
| உபாத்தியாயன் | — | உபாத்தியாயினி |

(4) கீழ்வரும் பெண்பாலுக்கு ஆண்பால் கூறு:—

| பெண்பால் | ஆண்பால் |
|---|---|
| வேலைக்காரி | |
| பெரியவள் | |
| சிறுமி | |
| மனைவி | |
| அண்ணி | |
| தங்கை | |
| அரசி | |

(5) கீழ்வருபவைகளுக்குப் பன்மை கூறு:—

| | | |
|---|---|---|
| தம்பி | — | தம்பிமார் |
| அண்ணன் | | |
| சிறுவன் | | |
| வைத்தியன் | | |
| சகோதரன் | | |
| சகோதரி | | |

(6) பக்கத்தில் காட்டியிருக்கும் எழுத்துக்கள் உள்ள சொற்களை எடுத்து எழுது:—

| | | |
|---|---|---|
| 1 | மீனாள் என்னைக் காணாள். | ன ண |
| 2 | இராமன் கடையில் கரூர் விலை. | ரா ரூ |
| 3 | மரப்பூனை மணைமேல் இருக்கிறது. | னை ணை |
| 4 | வேலைக்காரன் நாளைக்கு வருவான். | லை ளை |
| 5 | அவனோடு இருந்தால் கண்ணோய் வரும். | னோ ணோ |
| 6 | கற்றோர் எவரோ அவரே உற்றோர். | றோ ரோ |

# 3. கங்குவின் பிறந்த நாள்

| | | |
|---|---|---|
| சிறு பையன் | சந்தோஷமாய் | பணியாரம் |
| புதிய சட்டை | பார்ப்பதற்கு | சுட்டுக்கொடு |
| தலைப்பாகை | பிடித்துக்கொண்டு | ஆசையாய் |
| கைக்குடை | பாய்ச்சலில் | நிறைய |
| கால்சட்டை | உடுத்து | கொடுத்தார்கள் |

ஓர் ஊரில் ஒரு சிறு பையன் இருந்தான். அவன் பெயர் கங்கு என்பது. ஒரு நாள் கங்குவினுடைய பிறந்த நாள் வந்தது. அன்றைக்குக் கங்குவின் அப்பா அவனுக்கு ஒரு புதிய சட்டையும் ஒரு புதிய கால் சட்டையும் வாங்கிக் கொடுத்தார். கங்குவின் அம்மா அவனுக்கு ஒரு புதிய தலைப் பாகையும் ஒரு சிறு குடையும் வாங்கித் தந்தாள்.

கங்கு அன்றைக்குப் புதிய சட்டையையும் புதிய கால் சட்டையையும் புதிய தலைப்பாகையையும் போட்டுக் கொண்டான். அவன் கையில் குடையைப்

பிடித்துக் கொண்டான். கங்கு அப்பொழுது பார்ப்பதற்கு அழகாயிருந்தான். அவன் அப்பொழுது சந்தோஷமாயிருந்தான். கங்கு, "அப்பா! அப்பா! இன்றைக்கு என் பிறந்தநாள் அல்லவா? நான் பாட்டி வீட்டிற்குப்போய் வருகிறேன்" என்றான். கங்கு கையில் குடை பிடித்துக் கொண்டு,

ஒரு குதி குதித்தான்;
ஒரு துள்ளு துள்ளினான்;
ஒற்றைக் கால் பாய்ச்சலில்

பாட்டி வீட்டிற்குப் போனான். கங்கு போய்க்கொண்டிருக்கும் பொழுது அவன் ஒரு புலியைப் பார்த்தான். புலி கங்குவைப் பார்த்து, "கங்கு, கங்கு, நீ எங்கே போகிறாய்? நீ பார்ப்பதற்கு மிகவும் அழகாய் இருக்கிறாயே" என்றது.

கங்கு, "புலியே, புலியே, இன்றைக்கு என் பிறந்த நாள். நான் பாட்டி வீட்டிற்குப் போகிறேன். என் அப்பாவும் அம்மாவும் எனக்கு இன்றைக்குப் புதிய கால் சட்டையும் புதிய சட்டையும் புதிய தலைப் பாகையும் புதிய குடையும் வாங்கிக் கொடுத்தார்கள். நான் உடுத்திக் கொண்டு என் பாட்டியைப் பார்க்கப் போகிறேன்" என்றான்.

புலி, "கங்கு, கங்கு, நானும் உன்னோடு வரலாமா"? என்றது. அதற்குக் கங்கு, "புலியே, நீ வரவேண்டாம். நான் மாத்திரம் போய் வருகிறேன்" என்று சொல்லிப் போய்விட்டான்.

கங்கு பாட்டி வீட்டுக்குப் போனான். பாட்டி "கங்கு, வா, வா. உனக்கு என்ன வேண்டும்?" என்றாள். கங்கு, "பாட்டி, பாட்டி, எனக்குப் பணியாரம் தின்ன ஆசையாய் இருக்கிறது. சுட்டுக் கொடு" என்றான்.

பாட்டி "கங்கு! நான் பணியாரம் சுடமுடியாது. நான் உனக்குப் பானை நிறைய நெய் அனுப்புகிறேன். அதை அம்மாவிடம் சொல்லு. அம்மா உனக்குப் பணியாரம் சுட்டுக் கொடுப்பார்கள்" என்றாள். அதைக் கேட்ட கங்கு,

ஒரு குதி குதித்தான்;
ஒரு துள்ளு துள்ளினான்;
ஒற்றைக்கால் பாய்ச்சலில்

அம்மாவிடம் போனான்.

நெய் வீட்டுக்கு வந்துவிட்டது. கங்கு, "அம்மா, அம்மா, பாட்டி என் பிறந்த நாளுக்கு என்ன வேண்டும் என்று என்னைக் கேட்டார்கள். நான் பணியாரம் வேண்டும் என்றேன். பாட்டி சுடத் தெரியாது என்றார்கள். அதற்குப் பாட்டி பானை நிறைய நெய் அனுப்பியிருக்கிறார்கள். அம்மா! பணியாரம் சுட்டுக் கொடு" என்றான். அம்மா நெய்யில் பணியாரம் சுட்டாள். பணியாரத்தைக் கண்ட கங்கு,

ஒரு குதி குதித்தான் ;
ஒரு துள்ளு துள்ளினான் ;
ஒற்றைக்கால் பாய்ச்சலில்

பணியாரத்தின் அருகில் ஓடினான். பிறகு எல்லோரும்

பணியாரம் தின்ன உட்கார்ந்தார்கள். அப்பா

இருபது பணியாரம் தின்றார். அம்மா நாற்பது பணியாரம் தின்றாள். கங்கு ஆசை தீர அறுபது பணியாரம் தின்றான். கதை முடிந்தது. கத்தரிக் காய் காய்த்தது.

### கேள்விகள்

(1) கங்குவிற்குப் பிறந்த நாளில் கிடைத்தவை என்ன?

(2) அவன் தன் பாட்டி வீட்டிற்கு எப்படிப்போனான்?

(3) அவன் போகும் வழியில் எதைச் சந்தித்தான்?

(4) பாட்டி அவனுக்கு என்ன கொடுத்தாள்?

(5) அவன் தின்ற பணியாரங்கள் எத்தனை?

### பயிற்சி

(1) கீழ்வருஞ் சொற்களுக்கு எதிர் வார்த்தைகளைக் கூறு:- பெரிய, அருகில், புதிய, உள்ளே, நல்லது, சிறியோர், கோபம், இன்பம்.

(2) நீளம், உயரம், அகலம், குட்டை - இவைகளை வைத்து ஒவ்வொரு வாக்கியம் எழுது.

(3) 1. நாய் ஓடுகிறது. 2. கங்குவின் தகப்பனார் குடை வாங்கிக் கொடுத்தார்.

ஓடுகிறது, கொடுத்தார் என்னும் சொற்கள் செயலைக் காட்டுகின்றன. ஒரு பொருளின் செயலை அதாவது வினையைக் குறிக்கும் சொல் வினைச்சொல். ஓடுகிறது, கொடுத்தார் என்னும் இரண்டு சொற்களும் வினைச் சொற்கள்.

(4) கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் கண்டுபிடித்து எழுது :—

(1) கங்கு ஒரு குதி குதித்தான்.

(2) கங்கு அறுபது பணியாரம் தின்றான்.

(3) அம்மா சிரித்தாள்.

(4) சிங்கம் காட்டில் கர்ஜிக்கிறது.

(5) யானை பிளிறுகிறது.

(6) காக்கை கரைகிறது.

பயிற்சி

# நெற்பானையும் எலியும்

(2 நிமிஷத்தில் படித்துக் கதையைச் சொல்லு)

பாட்டி வீடு ஒன்று இருந்தது. அந்தப் பாட்டி வீட்டில் பழம்பானை ஒன்று இருந்தது. அந்தப் பழம் பானை நிறைய நெல் இருந்தது.



நெல் இருந்த பானையில் ஒரு சந்து இருந்தது. அந்தச் சந்தில் எலி நுழைய வழி இருந்தது.

ஒரு சுண்டெலி நெல் தின்ன விரும்பியது. அது அந்தப் பானையின் சந்தின் வழியாக உள்ளே நுழைந்தது. அது நெல்லை வயிறுரத் தின்றது. அதன் உடம்பு பருத்துவிட்டது. அதற்கு வெளிவர முடியவில்லை.

பாட்டி வந்து பானையைப் பார்த்தாள். பாட்டியுடன் ஒரு பூனை வந்தது. அந்தப் பூனை பானையில் எலி இருப்பதைக் கண்டது. அது உடனே பானையுள் பாய்ந்து அந்த எலியைப்பிடித்துக்கொண்டது.



கள்ளவழியில் போவார்க்குக் கட்டாயம் ஆபத்து.

# 4. தபால் கடிதத்தின் சரித்திரம்

| | | |
|---|---|---|
| தபாற் சாவடி | குறிப்பிடப்பட்டிருக்கும் | ஊர்வாரியாய் |
| தபாற்காரன் | ஒப்படைக்கப்படும் | குமாஸ்தா |
| முத்திரை | வீடு வீடாய் | முறை |

இது தபால் பெட்டி. இம்மாதிரியான பெட்டிகள், தபாற் சாவடியிலும் பட்டணங்களில் சில தெருக்களிலும், கிராமங்களிலும் இருக்கும். இந்தப் பெட்டியின் அடியில் கடிதம் எடுத்துக்கொண்டு போகும் நேரம் குறிக்கப்பட்டிருக்கும். நாம் எழுதிய கடிதங்களை இதில் போடுகிறோம்.



தபாற் சேவகன் நாம் போடும் கடிதங்களை எடுத்துக் கொண்டுபோய்த் தபாற் சாவடியில் கொடுப்பான். அங்குள்ள ஆள் கடிதங்களுக்கு முத்திரை போடுவான். அந்த முத்திரையில் தேதி, நேரம், இடம் ஆகிய இவைகள் குறிப்பிடப்பட்டிருக்கும். முத்திரையிட்ட கடிதங்களைப் பையிற்போட்டுக் கட்டி, வண்டியிலோ ஆள் மூலமோ தபாற்சாவடித் தலைவர் அனுப்புவார்.

நீங்கள் மெயில் ரயில் வண்டியில் தபால் பெட்டி இருப்பதைப் பார்த்திருக்கலாம். அந்த வண்டியில்







தபால் குமாஸ்தாக்கள் இருப்பார்கள். அவர்களிடம் முத்திரையிடப்பட்ட கடிதங்கள் அடங்கிய பைகள் ஒப்படைக்கப்படும்.

வண்டியில் உள்ள தபால் குமாஸ்தா, புகை வண்டி நிலையத்தில் வண்டி நிற்கும்போது, அந்த நிலயத்திற்கு உரிய கடிதப் பையை அங்கு வந்து காத்துக்கொண்டிருக்கும் தபால் ஆளிடம் கொடுப்பான். தபால் ஆள் அந்தப் பையைக் கொண்டு போய் அந்த ஊரில் உள்ள தபாற் சாவடியில் சேர்த்துவிடுவான். சாவடியில் உள்ள குமாஸ்தா அக்கடிதங்களை எடுத்துத் திரும்பவும் முத்திரை யிடுவான். இந்த முத்திரையில் சாவடி யிருக்கும் ஊரின் பெயரும், கடிதம் வந்து சேர்ந்த நேரமும், தேதியும் குறிப்பிடப்பட்டிருக்கும்.

தபாற்காரன் அக்கடிதங்களை ஊர்வாரியாகப் பிரித்து அவைகளுக்கு உரியவர்களுடைய வீடு வீடாகப் போய் அவைகளைக் கொடுத்துவிடுவான். இதுதான் கடிதம் போகும் முறையாகும்.

கேள்விகள்

(1) உன் நண்பனிடமிருந்து உனக்குக் கடிதம் வந்தால் நீ அது எங்கிருந்து வந்தது என்று எப்படி அறிந்து கொள்வாய்?

(2) ஓர் ஊரிலிருந்து கடிதம் மற்றோர் ஊருக்கு எப்படிப் போகிறது?

(3) தபால் அனுப்புவதற்கு எப்படி நாம் கட்டணம் செலுத்துகிறோம்?

பயிற்சி

(1) குறிப்பிடப்பட்டிருக்கும், வீடுவீடாக, ஊர்வாரியாக— ஒவ்வொரு வார்த்தையையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுது.

(2) தபாற்காரன் வந்து – இங்கே அர்த்தம் முடிந்திருக்கிறதா? இல்லை. தபாற்காரன் வந்து கடிதம் கொடுக்கிறான் - இங்கே கருத்து முடிந்திருக்கிறதா? முடிந்திருக்கிறது. முடிந்த கருத்தை உடையதே வாக்கியம்.

(3) வந்த பையன் - எத்தனை சொல்கள் இருக்கின்றன? அர்த்தம் முடியாமல் சொற்கள் தொடர்ந்திருப்பதைச் சொல் தொடர் என்பர். இரண்டு சொல் தொடர்கள் சொல்.

(4) இரண்டிரண்டு வாக்கியங்கள், சொல் தொடர்கள் எழுது.

# 5. பனைமரம்

| | | | |
|---|---|---|---|
| வளர்ந்த | வரிச்சல் | ஜம்பங்குடை | காளையர் |
| காரியத்தை | புரிமணை | கோடைக்காலம் | கன்னியர் |
| பிறகு | ஓதுகின்ற | நுங்கு | களை |
| கன்று | ஓலைத்தடுக்கு | விசிறி | தீர்க்கும் |

பனைமரமே, பனைமரமே,
என் வளர்ந்தாய் பனைமரமே ?
நான் வளர்ந்த காரியத்தை
நாட்டாரே சொல்லுகிறேன்:
வெட்ட நல்ல விறகாவேன்.
வீடு கட்ட மரம் ஆவேன்.
கட்ட நல்ல கயிறு ஆவேன்.
கன்று கட்ட தும்பு ஆவேன்.
வாரவட்டை நான் ஆவேன்.
வரிச்சல்கள் நான் ஆவேன்.
பலத்த சுமை சால்களுக்குப்
புரிமணையும் நான் ஆவேன்.
ஓதுகின்ற பிள்ளைகட்கு
ஓலைத் தடுக்கு ஆவேன்.
நனைந்து வருவார்க்கு
ஜம்பங்குடை நான் ஆவேன்.
பசித்து வருவார்க்குப்
பனம்பழம் நான் ஆவேன்.
பாலர் பெரியோர்க்குப்
பனம்பதநீர் நான் ஆவேன்.

சித்திரைக் கோடையிலே
  சிறந்த நல்ல நுங்காவேன்.
காளையர்க்கும் கன்னியர்க்கும்
  களைதீர்க்கும் விசிறி ஆவேன்.
சகலமான வேலைக்கும்
  ஜாக்கிரதையாய் நான் இருப்பேன்.

## கேள்விகள்

(1) பனைமரம் நமக்கு எந்த எந்த வகையில் பயன்படுகிறது?

(2) நுங்கு எந்த மாதங்களில் கிடைக்கும்?

(3) நீ பனைமரத்தின் உபயோகங்களைப்பற்றி 10 வாக்கியங்கள் எழுது.

(4) கோடைக்காலத்திற்கு வேறு பெயர் என்ன?

(5) ஓலைக்கும் இலைக்கும் வேற்றுமை என்ன?

## பயிற்சி

(1) தோப்பு, நந்தவனம் - இவைகளுக்கு உள்ள வேற்றுமை யாது?

(2) கீழ்வருபவைகளைச் சேர்த்தெழுது:—

தோப்பு + ஆவேன் = தோப்பாவேன்
விறகு + ஆவேன் =
தும்பு + ஆவேன் =
தடுக்கு + ஆவேன் =

(3) கீழ்வருபவைகளைப் பிரித்து எழுது:-

விழுந்தெழுந்தான் = விழுந்து + எழுந்தான்
உண்டுகொண்டிருந்தான் =
செலவாயிற்று =
என்றுரைத்தார் =
செய்திருந்தேன் =

(4) இந்தப் பாட்டிலுள்ள பெயர்ச்சொல் நான்கும் வினைச் சொல் நான்கும் எழுது.

(5) மரம் - ஒன்று? ஒன்றுக்குமேற்பட்டதா?
மரங்கள் - ஒன்று? பலவா?

மரம் என்பது ஒன்று. ஆகையால் இது ஒருமை; மரங்கள் என்ற பெயர்ச்சொல் பலவற்றைக் குறிக்கிறது, ஆகையால் இது பன்மை.

ஒன்றைக் குறிப்பது ஒருமை. பலவற்றைக் குறிப்பது பன்மை.

(6) கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள ஒருமைப் பெயர்களைப் பன்மைப் பெயர்களாக மாற்றி எழுது:—

(1) தபாற்காரன் கடிதம் கொண்டுவருகிறான்.

(2) எலி நெற்பானையில் நுழைகிறது.

(3) ஒரு குடை கிடைத்தது.

(4) எனக்கு ஒரு சகோதரன் இருக்கிறான்.

# 6. பொதுஜன ஊழியர்கள்

| | | |
|---|---|---|
| பொதுஜனம் | பெறுகிறுன் | ஊழியர்கள் |
| அரசாங்கம் | போலீஸ்காரன் | வரிகாரர் |
| பரீட்சை | வரிப்பணம் | இரகஸ்யப் போலீஸ் |
| ஆதாரம் | கொலேயாளி | குப்பைகள் |
| சௌகரியம் | வாந்திபேதி | சுகாதாரம் |
| அங்கத்தினர் | உறுப்பினர் | நகரசபை |
| பிளேக் | மருந்து ஊசி | குடல் சுரம் |
| ஜில்லா சபை | வேலேசெய்கிறவர் | கிராம முனிசீப் |
| மற்றவர்கள் | மணியக்காரர் | ஊழியர் |
| உழைப்பவர் | மரியாதை | வரி வாங்குபவர் |
| தலேயாரி | சாலேகள் | தெருக்கள் |

இவன் போலீஸ்காரன். திருடுபவர்களேப் பிடித்துத் தண்டனே அடையச் செய்வது இவனுடைய வேலே. இதற்காக இவன் சம்பளம்பெறுகிறுன். இந்தவேலேக்குப் பலமான ஆட்களேத் தேர்ந்தெடுப்பது வழக்கம். இவர்கள் சில பரீட்சைகளிலும் தேற வேண்டும். அப்பொழுதுதான் இவர்களுக்கு இந்தவேலே கிடைக்கும். இவர்களில் இரகஸ்யப் போலீஸ்காரர் என ஒருவகையினர் உண்டு. அவர்கள் துப்பின் மூலமாய்த் திருடனேயோ கொலேயாளியையோ கண்டு பிடித்து விடுவார்கள். ஒருவகைப் போலீஸார் சந்தி

களில் நின்று வண்டிப் போக்கு வரத்துக்களைக் கவனிப்பார்கள். இவர்கள் போகும் வண்டிகளை இடப் பக்கமாகவும் வரும் வண்டிகளை வலப் பக்க மாகவும் போக விடுவார்கள். பொதுஜனங்கள் சௌகரியத்திற்காக இவர்கள் இருக்கிறார்கள்.




இவர் பொது ஜனங் களின் சுகாதாரத்தைக் கவனிப்பவர். இவர் வாந்திபேதி, பிளேக், குடல்சுரம்முதலிய நோய் கள் ஊரில் பரவாதபடி மருந்து ஊசி குத்து பவர். அம்மை குத்து வதும் இவர் வேலை. இவர் தம் உயிரையும் பாராமல் மற்றவர்களு க்கு உழைப்பவர்.

இவர்வரிவாங்குபவர். நாம் திருடர் பயமில்லா மல் சாலைகளில் போகிறோம். நாம் கூடியவரையில் நோய் இல்லாதபடி வாழ்கிறோம். இன்னும் பல நன்மைகள் பெறுகிறோம். தெருக்களில் விளக்குகள் எரிகின்றன. ஏழைப் பிள்ளைகளுக்கு உணவு கொடுத் துக் கல்வி கற்றுக் கொடுக்கப்படுகிறது. அரசாங்கம்

இவைகளைச் செய்வதற்குப் பணம் வேண்டும்.

அதனல் அரசாங்கம் வீடு வைத்திருப்பவர்களுக்கும் வியாபாரிகளுக்கும் வரி போடுகிறது. இவைகளைச் செய்வதற்கு வேண்டிய வரிப்பணத்தை வாங்குபவர் வரிகாரர். இவர் வரிப் பணம் வாங்காமல் போனல் அரசாங்கம் எப்படி நடக்கும்?

இவர் கிராம முனிசீப். ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு கிராம முனிசீப் உண்டு. இவர் கிராமத்தில்



கலகம் இல்லாதபடியும் திருடு நடவாதபடியும் பார்த்துக் கொள்வார். இவருக்குக்கீழ் மணியகாரர் என்பவரும் தலையாரியும் உண்டு.

இவன் தோட்டி. இவன் யாரும் செய்ய முடியாத வேலையைச் செய்கிறான். இவன் நம்முடைய சுகத்துக்கு ஆதாரமாயிருப்பவன். இவன் தெருக்களில் இருக்கும் குப்பைகளை எடுக்கிறான். இன்னும் இவன் மல

அறைகளிலிருந்து மலத்தை அப்புறப் படுத்துகிறான்.

நகர சபை அங்கத்தினர் என ஒருவர் உண்டு. அவரைத் தேர்தல் வைத்துத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறோம். அவரைப் போன்றவர் பலர் நகர சபையில் உண்டு. அவர்களுக்குத் தலைவர் ஒருவர் உண்டு. அவர்கள் ஒன்றுசேர்ந்து நகரத்திற்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்வார்கள்.

இப்படியே ஜில்லா சபைகளுக்கும் அங்கத்தினர்கள் தேர்ந்தெடுத்து அனுப்பப்படுகிறார்கள். அவர்களும் ஊரின் நன்மையைக் கருதி வேலை செய்கிறார்கள். அவர்கள் சம்பளம் வாங்காமல் பொதுஜன நன்மைக்கு உழைப்பவர்கள்.

இந்தப் பொதுஜன ஊழியர்களிடம் நாம் மரியாதையாக நடந்துகொள்ள வேண்டும்.

## கேள்விகள்

(1) போலீஸ்காரனுக்கு என்ன என்ன வேலைகள் உண்டு?

(2) ஓர் ஊரில் வாந்திபேதி, அம்மை முதலான கொள்ளை நோய்கள் வந்தால் நாம் என்ன செய்யவேண்டும்? அப்படிச் செய்வதால் ஏற்படும் நன்மை என்ன?

(3) வரி எதற்கு வாங்கப்படுகிறது?

(4) சம்பளம் வாங்காமல் பொதுஜன நன்மைக்கு உழைப்பவர் யார்?

(5) பொதுஜன ஊழியரிடத்தில் நாம் எவ்வாறு நடந்து கொள்ளுதல் வேண்டும்?

## பயிற்சி

(1) கீழ்வரும் இரண்டு இரண்டு வாக்கியங்களை ஒன்று சேர்த்து எழுது:—

(1) போலீஸ்காரன் திருடர்களைப் பிடிக்கிறான்.

போலீஸ்காரன் தெருவில் சண்டை போடுகிறவர்களைப் பிடிக்கிறான்.

(2) கிராம முனிசீப் கிராமத்தில் கலகம் நடவாதபடி பார்க்கிறார்.

கிராம முனிசீப் கிராமத்தில் திருடு நடவாதபடி பார்க்கிறார்.

(3) வரிகாரர் வரி வாங்குகிறார்.

வரிகாரர் வரிப்பணத்தை வரிச் சாவடியில் கட்டுகிறார்.

(4) இராமன் நடிப்பதில் வல்லவன்.

இராமன் பாடுவதில் வல்லவன்.

(2) போலீஸ்காரன், வரி வாங்குவோன் - இவர்கள் மனிதர்கள். இவர்கள் நல்லது கெட்டது அறியக் கூடியவர்கள். ஆகையால் இவர்கள் உயர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவர்களை உயர்திணை என்கிறோம்.

நாய், எலி - இவைகள் உயர்திணை அல்லாதவைகள். இவைகள் நல்லது கெட்டது அறியும் சக்தி இல்லாதவைகள். மரம், மலை என்பவைகளும் அப்படியே. ஆகையால் இவைகளை அல்திணை அதாவது உயர் திணை அல்லாதவை என்கிறோம். அல் + திணை = அஃறிணை.

(3) கீழ்வருபவைகளில் உயர்திணை அஃறிணை கண்டுபிடித்துக் கீழ்க் குறித்துள்ள கட்டத்தில் எழுது:—

(1) அரசன் வீதியில் யானைமேல் வருகிறான்.

(2) வேலைக்காரன் வண்டி கொண்டுவந்தான்.

(3) தபால்காரன் கடிதங்களை வீடுகளுக்குக் கொண்டு போய்க்கொடுப்பான்.

(4) புலி கங்குவைக் கூப்பிட்டது.

(5) போலீஸ்காரன் கொலையாளியைப் பிடிப்பான்.

(6) தலையாரி கிராமத்தைப் பாதுகாக்கிறான்.

| உயர்திணை | அஃறிணை |
|---|---|
| 1 | 1 |
| 2 | 2 |
| 3 | 3 |
| 4 | 4 |
| 5 | 5 |
| 6 | 6 |
| 7 | 7 |

## பயிற்சி



மேலே உள்ள படங்களைப் பார்த்துக் கதை எழுது.



## 7. ஈ

| | | |
|---|---|---|
| லட்சம் | அரைமைல் | தப்பி |
| உலகம் | பண்டங்கள் | நூற்றைம்பது |
| எமன் | பலகாரங்கள் | உருவம் |
| அஜாக்கிரதை | ஓரம் | மாறுகின்றன |
| சீதபேதி | கையாண்டால் | பதினைந்து |
| கண்ணோய் | திரவம் | தும்பிக்கை |
| பரவாதிருக்க | அத்தனை | உறிஞ்சும் |
| மொய்க்கும்படி | இல்லை | மாற்றிவிடும் |
| சாக்கடை | சாணி | க்ஷயம் |
| உடனுக்குடன் | உறங்க | விஷபேதி |
| வெய்யிற்காலம் | அழுகிப்போன | அங்கங்கே |
| குறைவாய் | வரையில் | முக்கியமாக |
| ஆனிமாதம் | டைபாயிட்சுரம் | சமையலறை |
| ஆடிமாதம் | எங்கெங்கு | சுவர் |
| ஏராளமாய் | வயிறு | திரை |
| இரத்தபேதி | ஜன்னல் | வாழலாம் |

உலகத்தில் ஏறக்குறைய 30 லட்சம் பூச்சி வகைகள் இருக்கின்றன. அவைகளில் ஒன்று ஈ.

ஈ வீட்டு எமன். சிறிது அஜாக்கிரதையாய் இருந்தால் இது உயிருக்கு ஆபத்தை உண்டாக்கும்.

ஈக்கள் வெய்யிற் காலத்தில் அதிகமாயும் மழைக் காலத்தில் குறைவாயும் இருக்கும். நம் நாட்டில் ஈக்கள் ஆனி ஆடி மாதங்களில் ஏராளமாய் இருப்பதைப் பார்க்கலாம்.



ஈக்கள் மழைக் காலத்தில் இறந்து விடுகின்றன. தப்பிப் பிழைத்த ஈக்கள் ஓடுகளினுள்ளும், கூரைகளிலும், வீடுகளின் மூலை முடுக்குகளிலும், நெடுங் காலம் தூங்கும். எத்தனை நாட்கள் அவைகள் தூங்கினாலும், அத்தனை நாட்களுக்கும் அவைகளுக்கு உணவு வேண்டியதில்லை.

பெண் ஈக்கள் உறங்கப் போவதற்கு முன் சாணியிலும் குப்பையிலும் அழுகிப்போன பொருள்களிலும்



முட்டையிடும். ஒரு பெண் ஈ நூறுமுதல் நூற்றைம்பது வரையில் முட்டையிடுமாம். அந்த முட்டையிலிருந்து வரும் குஞ்சுகள் படத்தில் பார்க்கிற உரு

வங்களையடைந்து பெரிய ஈயாக மாறுகின்றன. ஈக் குஞ்சுகள் பத்து முதல் பதினைந்து நாட்களுக்குள் பெரிய ஈக்களாக மாறுமாம்.

ஈக்குத் தன் வாயால் எதையும் கடித்துத் தின்பது முடியாது. அது தன் தும்பிக்கை போன்ற தன் சிறு உறுப்பினால் உறிஞ்சும். அது தின்பதைத் திரவ ரூபமாக மாற்றிவிடும். ஈக்கு மலம் கழித்துக் கொண்டே தின்பது வழக்கமாம்.

ஈயினால் சீதபேதி, இரத்தபேதி, டைபாயிட் என்ற குடல் சுரம், க்ஷயம், கண்ணோய் முதலியவைகள் பரவும்.

ஈ சாதாரணமாக அரை மைல் முதல் ஒரு மைல் வரைக்கும் பறந்துபோகும். அது எங்கெங்கு போகிறதோ அங்கங்கே நோய்களைக் கொண்டு போகும். ஆகையால், நோய் பரவாதிருக்க வேண்டு மானால் நாம் ஈக்களைக் கொல்லவேண்டும்.

ஈ உணவுப் பண்டங்களில் உட்கார்ந்து தன் கால் களிலிருந்தும் வயிற்றிலிருந்தும் வரும் கிருமி களை அப்பண்டங்களில் விட்டுவிட்டுப் போகும். அவை களைத் தின்பவர்கள் விஷபேதி முதலான நோய் களுக்கு ஆளாவார்கள்.

ஈ பாலிலும், உணவிலும் மொய்க்காதபடி பாத் திரங்களை மூடிவைக்கவேண்டும். குப்பைகளை உடனுக் குடன் வெளியேற்ற வேண்டும்.

முக்கியமாக வீட்டுவேலை செய்பவர்களுக்கு எதை யும் ஈக்கள் மொய்க்கும்படி போடப்படாதென்று

சொல்லவேண்டும். ஈக்கள் மொய்க்கும்படியாக வைத்துள்ள பலகாரங்களையும், சாக்கடை யோரங்களில் வைத்துள்ள பொருள்களையும் வாங்குதல் கூடாது. சமையல் அறைகளின் ஜன்னல்களில் திரைகட்டி வைக்கவேண்டும். சுவர்களில் ஈக்கள் முட்டையிடாதபடி சுண்ணும்பு அடிக்கவேண்டும். இம்முறைகளைக் கையாண்டால் ஈ எமனிடமிருந்து நாம் தப்பி வாழலாம்.

### கேள்விகள்

(1) பூச்சி வகைகள் எத்தனை?

(2) ஈக்கள் நம் நாட்டில் எந்த மாதங்களில் ஏராளமாய் இருக்கும்?

(3) பண்டத்தை எப்படி ஈ உட்கொள்ளும்?

(4) ஈ எவ்வளவு தூரம் பறந்துபோகும்?

(5) ஈயினுல் வரும் நோய்கள் எவை?

(6) ஈ நோய்களை எப்படிப் பரவச் செய்கிறது?

(7) ஈக்கள் வீட்டில் அதிகமாய் இல்லாதபடி என்ன செய்தல் வேண்டும்?

### பயிற்சி

(1) மாறுகிறது, மாற்றுகிறது—இரண்டுக்கும் உள்ள வித்தியாசமான அர்த்தம் என்ன? மாறுகிறது என்ற சொல்லை வைத்து ஒருவாக்கியம் எழுது. மாற்றுகிறது என்ற சொல்லைவைத்து ஒருவாக்கியம் எழுது.

(2) ஓடு—இதற்கு இரண்டு அர்த்தம் கூறு.

(3) ஏராளமாய், குறைவாய், கையாண்டால், பரவாதிருக்க - ஒவ்வொரு சொல்லையும்வைத்து ஒவ்வொரு வாக்கியம் எழுது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 FEB 1940
MADRAS

(4) கீழ் வருபவைகளைச் சேர்த்தெழுது:—

அங்கு + அங்கு = அங்கங்கு
எங்கு + எங்கே =
உடனுக்கு + உடன் =
கண் + நோய் =
சமையல் + அறை =
சாக்கடை + ஓரம் =
குறைவு + ஆய்

(5) அரை, அறை, கொல்லவேண்டும், கொள்ளவேண்டும் - இவைகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுது.

(6) கீழ்வருபவைகளுக்குப் பன்மை எழுது:—

| ஒருமை | பன்மை |
|---|---|
| 1. ஒன்று | 1. |
| 2. அது | 2. |
| 3. போலீஸ்காரன் | 3. |
| 4. அவன் | 4. |
| 5. தம்பி | 5. |
| 6. ஈ | 6. |

(7) கீழ்வரும் வாக்கியங்களைப் பன்மையாகமாற்று.

(1) தோப்பில் மாமரம் இருக்கிறது.

(2) இவன் உன் தோழன்.

(3) அவன் எத்தனை குடம் கொடுப்பான்?

(4) ஈயால் நோய் உண்டாகிறது.

(5) எனக்கு ஒரு புத்தகம் இருக்கிறது.

(6) ஒரு பணியாரம் சுடப்பட்டது.

(7) உனக்குக் கொடுத்தது எங்கே இருக்கிறது?

(8) இது உன் தம்பி வீடு.

(9) நான் பாடம் படிக்கிறேன்.

(10) நீ பழம் தின்கிறாய்

# 8. வாத்தும் நரியும்

| | | |
|---|---|---|
| குட்டை | ஆபத்து | தனி |
| தாய் வாத்து | மேய்ந்து | உலாவ |
| வாத்துக் குஞ்சு | க்ஷேமம் | அழகு |
| குள்ளநரி | புகழ்ந்து | அருகில் |
| பாய்ச்சல் | ஏறிட்டு | கழிந்தன |
| மெதுவாக | கூட்டம் | கர்வம் |

தாய் வாத்து, குட்டையில் தன்னுடைய ஆறு



குஞ்சுகளோடு நீந்திக்கொண்டு இருந்தன. அது, "குழந்தைகளே, என் பக்கத்திலேயே இருங்கள். இல்லாவிட்டால் ஏதாவது ஆபத்து வரும்" என்று சொல்லிற்று.

அது சிறிது நேரம் நீந்திய பின் தரையில் வந்து



தன் குஞ்சுகளோடு மேய்ந்துகொண்டிருந்தது. குஞ்சுகள் அழகாய் இருந்தன.

ஒரு திருட்டுக் குள்ள நரி வாத்துக்குஞ்சுகளைப் பார்த்து மெதுவாக

அவற்றினிடம் வந்து தலைகுனிந்து, "க்ஷேமமா? நீங்கள் காலையில் அழகாக உலாவுகிறீர்கள். உங்கள் அழகு யாருக்கு வரும்? மயிலும் உங்களுக்கு இணையாகுமா?" என்று புகழ்ந்து பேசியது.

வாத்து ஒன்றுமே பதில் சொல்லவில்லை. அது இத்திருட்டு நரியை ஏறிட்டும் பார்க்காமல், "குழந்தைகளே. குட்டைக்கு வாருங்கள்; அதன் பேச்சுக்கு ஏமாறிப் போகாதீர்கள். அது உங்களைப் பிடித்துத் தின்றுவிடும்" என்றது. வாத்தும் குஞ்சுகளும் குட்டையில் உடனே குதித்துவிட்டன.

சில நாட்கள் கழிந்தன. வாத்துக் குஞ்சுகள் பெரியதாயின. அவைகள் கூட்டமாகத் தண்ணீரில் நீந்தியும் தரையில் மேய்ந்தும் பழகின. அவைகளில் ஒன்று கர்வம் பிடித்தது.

அது ஒருநாள் தாயின் பேச்சைக் கேளாமல் தனியாக வந்து தரையில் உலாவியது. அந்தச் சமயத்தைப் பார்த்துத் திருட்டு நரி அதனிடம் ஓடிவந்து, "நீ அழகாக இருக்கிறாய்? நான் உன்னைப்போல எங்கும் பார்க்கவில்லை" என்று புகழ்ந்தது. வாத்துக் குஞ்சு, "அப்படியா? நீ சொல்வது உண்மைதான். என் வெள்ளை இறக்கையைப் பார்" என்றது. நரி "ஐயோ! என் கண் தெரியவில்லையே. அருகில் வா. நான் பார்க்கிறேன்" என்றது. அது தாய் சொன்னதை மறந்துவிட்டுத் திருட்டு நரியின் அருகில் சென்றது. என்ன நடந்தது தெரியுமா?

திருட்டு நரி உடனே ஒரு பாய்ச்சலாய்ப் பாய்ந்து அதன் கழுத்தைப் பிடித்துத் தூக்கிக் கொண்டு ஒரே ஓட்டமாய்க் காட்டிற்குள் ஓடிற்று. குழந்தை வாத்து நரியைப் பார்த்து, "நரியே, நரியே, என்னைத் தின்னாதே" என்று வேண்டிக்கொண்டது. அகப்பட்டதை நரி தின்னாமல் விடுமா? நரி அதன் தலையைப் பிடித்து எடுத்துக்கொண்டுபோய்க் கடித்துத் தின்று விழுங்கிவிட்டது.



கேள்விகள்

(1) நரி சொல்லியது என்ன?
(2) தாய் குஞ்சுகளுக்குக் கூறியது என்ன?
(3) ஏன் வாத்துக் குஞ்சு நரியினிடம் அகப்பட்டது?
(4) இப்பாடத்திலிருந்து நீ தெரிந்துகொள்ளும் நீதி யாது?

பயிற்சி

(1) கீழ் வருவனவற்றைச் சேர்த்து எழுது.

வாத்து + குஞ்சு = வாத்துக்குஞ்சு
எலி + குஞ்சு =
கோழி + குஞ்சு =
காக்கை + குஞ்சு =
கிளி + குஞ்சு =
நாய் + குட்டி =
பூனை + குட்டி =
குதிரை + குட்டி =

பாம்பு + குட்டி =
எருமை + கன்று =
யானை + கன்று =

(2) கீழ்வரும் இரண்டு இரண்டு வாக்கியங்களைச் சேர்த்
தெழுதிப் படி:—

(1) வாத்து, குளத்தில் நீந்துகிறது.
வாத்துக்குஞ்சு குளத்தில் நீந்துகிறது.

(2) நரி வாத்தைப் பார்த்தது.
நரி வாத்துக்குஞ்சுகளைப் பார்த்தது.

(3) வாத்து நீரில் வசிக்கும்.
வாத்து நிலத்தில் வசிக்கும்.

# 9. கடிகாரம் பார்த்தல்

| | | |
|---|---|---|
| கடிகாரம் | சிறியமுள் | சொல்லவேண்டும் |
| மணிவட்டம் | பாருங்கள் | முயன்றுபார் |
| நிமிஷம் | காட்டுகின்றன | கோடுகள் |
| சுற்றிவரும் | மொத்தம் | தெரிந்துகொள் |
| பெரியமுள் | எண்கள் | ஐவைந்து |

தம்பி, உனக்கு மணி பார்க்கத் தெரியுமா? தெரியாவிட்டால் தெரிந்துகொள். கடிகாரத்தில் உள்ளே யந்திரம் இருக்கிறது. யந்திரத்துக்கு மேலே மணி காட்டும் மணிவட்டம் இருக்கிறது. அந்த மணிவட்டத்தில் பன்னிரண்டு எண்கள் குறிக்கப்பட்டுள்ளன. ஒரு மணிக்கும் இரண்டு மணிக்கும் நடுவில் ஐந்து கோடுகள் இருப்பதைக் காணலாம். அந்தக் கோடுகள் நிமிஷத்தைக் காட்டுகின்றன. இப்படியே பன்னிரண்டு மணியிலும் ஐவைந்து கோடுகள் உண்டு. அந்தக் கோடுகளை எண்ணிப் பார்த்தால் மொத்தம் அறுபது இருக்கும். இந்த அறுபது கோடுகள் ஒரு மணிக்கு அறுபது நிமிஷங்கள் என்று காட்டுகின்றன.

கடிகாரத்தில் இரண்டு முள்களைப் பார்க்கலாம். ஒன்று பெரிய முள்; மற்றொன்று சிறிய முள். ஒரு மணிநேரம் ஆகவேண்டுமானால் பெரிய முள் பன்னிரண்டு மணிக்கோடுகளையும் சுற்றிவரவேண்டும்.

கடிகாரத்தில் சிறிய முள்ளும் பெரிய முள்ளும் பன்னிரண்டிலேயே இருந்தால் மணி பன்னிரண்டு.



முதலாவது கடிகாரத்தைப் பார். முதலாவது கடிகாரத்தில் சிறியமுள் பன்னிரண்டிலும் பெரியமுள் மூன்றிலும் இருக்கின்றன. இப்பொழுது மணி என்ன? மணி பன்னிரண்டே கால் ஆகிறது.

இரண்டாவது கடிகாரத்தைப் பார். சிறிய முள் பன்னிரண்டை விட்டுச் சிறிது விலகியும் பெரிய முள் ஆருவது மணியிலும் இருக்கின்றன. இப்பொழுது மணி என்ன? கடிகாரத்தைக் கவனித்துப்பார். இப்பொழுது மணி பன்னிரண்டரை ஆகிறது.





மூன்ருவது கடிகாரத்தைப் பார். சிறிய முள் பன்னிரண்டைவிட்டு விலகியும் பெரிய முள் ஒன்பதிலும் இருக்கின்றன. இப்பொழுது மணி என்ன? இப்பொழுது மணி பன்னிரண்டே முக்கால் ஆகிறது.




நான்காவது கடிகாரத்தைப் பார். சிறிய முள் ஒன்றின் பக்கத்திலும் பெரிய முள் பதினொன்றிலும் இருக்கின்றன. இப்பொழுது மணி என்ன? இப்பொழுது மணி ஒன்று அடிக்க ஐந்து நிமிஷங்கள் இருக்கின்றன.

சிறிய முள் மணி காட்டும்முள். பெரியமுள் நிமிஷமுள். இந்த இரண்டையும் கவனித்துப் பார்த்துத்தான் இன்ன மணிநேரம் என்று சொல்ல வேண்டும். இப்பொழுது உனக்கு மணி பார்க்கத் தெரியுமா? முயன்றுபார்.

### கேள்விகள்

(1) நீ பார்த்திருக்கும் கடியார வகைகளைச் சொல்.

(2) மூன்று அடித்துப் பதினைந்து நிமிஷங்களாகும்போது சிறியமுள் எங்கு இருக்கும்? பெரியமுள் எங்கு இருக்கும்?

(3) ஆறரைமணியாகும்போது சிறியமுள்ளும் பெரியமுள்ளும் எங்கிருக்கும்?

(4) ஒரு மணிக்கு எத்தனை நிமிஷங்கள்?

### திருப்பல் பயிற்சி

(1) வாக்கியம் என்றால் என்ன?

(2) சொற்றொடர் என்றால் என்ன?

(3) பெயர்ச்சொற்கள் இரண்டும் வினைச்சொற்கள் இரண்டும் எழுது.

(4) கீழ்வரும் வாக்கியங்களில் ஒருமையைப் பன்மையாகவும் பன்மையை ஒருமையாகவும் எழுது :—

(1) பிள்ளைகள் உணவு உண்கிருர்கள்.
(2) தோட்டத்தில் மாணுக்கர்கள் ஆடுகிருர்கள்.
(3) மாடு புல் மேய்கிறது.
(4) அவன் விளக்குக்கு எண்ணெய் ஊற்றுகிருன்.

கீழ்வருபவைகளிலிருந்து ஆண் பெண்களை ஜதை ஜதையாக எடுத்து எழுது :—

| | |
|---|---|
| எருது | குணவதி |
| சேவல் | ஊராள் |
| ஆண்புலி | பெண்மயில் |
| புருஷன் | பெரியவள் |
| ஊரான் | பௌத்திரி |
| ஆண்மயில் | பெட்டை |
| பேரன் | பெண்புலி |
| பௌத்திரன் | பசு |
| பெரியவன் | பேர்த்தி |
| குணவான் | மனைவி |

2 நிமிஷத்தில் கதையைப் படித்து எழுது.

## ஒத்திட்டுக் கேட்டல்

ஓர் ஊரில் குறும்புப் பையன் இருந்தான். அவன் பெயர் குப்பன் என்பது. அவன் யார் பேசினாலும் ஒத்திட்டுக்கேட்பது வழக்கம்.



ஒருநாள் இரவில் குப்பன் வழக்கப்படி இருவர் ரகசியமாய்ப் பேசியதைக் கேட்டுக்கொண்டிருந்தான்.

குப்பன் "ஐயோ அம்மா அப்பா எரிகிறதே, எரிகிறதே" என்று கத்தி அழுதான். பெற்றோர் ஓடிவந்துபார்த்தார்கள். அவர்கள் தேள் இருந்ததைக் கண்டு அதை அடித்தார்கள்.

குப்பன், "அம்மா இனிமேல் ஒத்திட்டுக் கேட்க மாட்டேன்" என்றான். அவர்கள் தேள் கொட்டின இடத்தில் தேள்மருந்து போட, வலி நின்றுவிட்டது.

# 10. வீதியில் செல்வது



வேகமாய்
வீணாக
கனவு
பெரியபட்டணம்
சாதாரணம்
பழகவேண்டும்
நடைமேடை
கொள்ள
மீறிப்போக
எச்சில்

முக்கியமாய்
வீண்பேச்சு
ஆகாயவிமானம்
தீங்குவராமல்
நிகழ்ச்சிகள்
ஆபத்து
கடக்க
கவலை
வழிகள்
கவனம்

உலகத்தில் வேகமாய்ப் போகவேண்டியது மிகவும் முக்கியமாகிவிட்டது. காலம் காசு. இப்போது காலத்தை வீணாகக் கழிக்க விரும்புவதில்லை. நம் நாட்டிலும் திண்ணைமேல் உட்கார்ந்து வீண் பேச்சுப்

பேசிக் கழித்த காலம் கனவாய்ப் போய்விட்டது. குறித்த இடத்திற்குச் சீக்கிரம் போவதற்கே மோட்டார் வண்டிகள், பஸ் வண்டிகள், துவிச்சக்கர வண்டிகள், ஆகாய விமானங்கள் முதலியவை வந்துவிட்டன. பெரிய பட்டணங்களிலும் சிறிய நகரங்களிலும் வண்டிகள் மிகுந்துவிட்டன. சிறு கிராமங்களின் பக்கங்களிலும் சாலைகளிலும் வேகமாக ஓடும் பஸ் வண்டிகளையும் மோட்டார்களையும் பார்க்கிறோம். ஆகையால் நாம் இக்காலத்தில் வீதிகளிலும் சாலைகளிலும் வெகு ஜாக்கிரதையாகப் போகவேண்டியவர்களாயிருக்கிறோம். நாம் பிறருக்குத் தீங்கு வராதபடி தெருக்களையும் சாலைகளையும் வைத்துக்கொள்ள வேண்டியவர்களாகவும் இருக்கிறோம்.

பத்திரிகைகளில் அடிக்கடி தெரு விபத்துக்களைப் படிக்கிறோம். சிறுவர்களும் பெரியோர்களும் அஜாக்கிரதையாகத் தெருக்களில் போவதால் கால் ஒடிவதும் கை ஒடிவதும் உயிருக்கு ஆபத்து வருவதும் சர்வ சாதாரண நிகழ்ச்சிகளாக இருக்கின்றன. ஆகையால், பிள்ளைகளே, நீங்கள் தெருக்களிலே போகும்போது ஜாக்கிரதையாகப் போகப் பழக வேண்டும்.

வீதியில் நடந்துபோகிறவர்கள், நடைமேடைகள் இருந்தால், அவைகள்மேல் நடந்துபோக வேண்டும்.

சிறுவர்கள் வண்டிகளின் பின் ஏறுவது கூடாது; வண்டியைப் பிடித்துக்கொண்டும் ஓடுதல் கூடாது. அப்படிச் செய்வது ஆபத்தானது.

சாலையில் நடப்பவர்கள் சாலைகளில் நடுவே நடந்துபோதல் கூடாது. சாலைகளில் நடை மேடையோ நடப்பதற்கு உரிய ஒதுக்கிடமோ இருக்கு மானால் அதிலேதான் நடந்து போகவேண்டும். இவைகள் இல்லாவிட்டால் சாலை ஓரமாக நடந்து போகவேண்டும். சாலையைக் கடக்கவேண்டுமானால் நடப்பவர்கள் முன்னும் பின்னும் வலமும் இடமும் பார்த்துக்கொண்டு நின்று ஒரு வண்டியும் ஓடாத போது சாலையைக் கடக்கவேண்டும். சிறிது நேரம் போனாலும் கவலை இல்லை. உயிருக்கு ஆபத்து வராத படி பார்த்துக்கொள்ள வேண்டும். நடப்பவர்கள் கவலையீனத்தாலேயே தெரு விபத்து ஏற்படுகிறது.



சைக்கில் விடுபவர்கள் எப்போதும் இடப் பக்க மாகவே போதலும் வருதலும் செய்தல் வேண்டும். கூட்டமா யிருந்தால் சைக்கிலில் போகிறவர்கள் மணி

அடிக்கவேண்டும். அதிகப் போக்குவரவு உள்ள இடங்களில் அதிக வேகமாகச் சைக்கிலை விடுவது ஆபத்தானது.

வீதிப் போலீஸ்காரன் நில் என்றதும் நின்று விடவேண்டும். ஒருவரும் போலீஸ்காரன் காட்டும் சைகையை மீறிப் போகவேகூடாது. அப்படிச் செய்வது மிகவும் ஆபத்தானது.

வீதியில் நடப்பவர்கள் வாழைப் பழம் தின்று விட்டுச் சாலை வழிகளில் போடுவதுகூடாது. ஒருவரும் எச்சில் துப்புவதும் சளியைச் சிந்துவதும் கூடாது. அப்படிச் செய்வது பெரிய பாவம்.

பிள்ளைகளே, நீங்கள் இவைகளைக் கவனித்து நடப்பீர்களாக.

கேள்விகள்

(1) நகரங்களில் தெருவில் போக்குவரத்து வண்டிகளைக் கவனித்து விடுவது யாருடைய வேலை?

(2) வீதியில் நடப்பவர்கள் என்ன கவனிக்கவேண்டும்?

(3) சாலையைக் கடக்கும்போது நாம் செய்யவேண்டியது யாது?

(4) நாம் வீதியில் என்ன செய்தல் கூடாது?

எதிர் வார்த்தைகள்

நாடு × காடு
பட்டணம் × கிராமம்
ஜாக்கிரதை × அஜாக்கிரதை

பயிற்சி

(1) மாடு மேய்கிறது.—மேய்கிறது என்னும் இந்த வினைச் சொல், ஒருமை. இது பன்மையாக வேண்டுமானல் மேய்கின்றன என்று ஆகவேண்டும்.

(2) கீழ்வரும் கோடிட்ட இடங்களில் தக்க பெயர்ச்சொற் களைப் போட்டு எழுது:—

(1) ——— புல் மேய்கின்றது.
(2) ——— ஓடுகிறது.
(3) ——— நிற்கின்றன.
(4) ——— கனைக்கின்றன.
(5) ——— பறக்கிறது.
(6) ——— நிற்கிறது.

(3) கோடிட்ட இடங்களில் தக்க வினைச்சொல் போட் டெழுது:—

(1) ஆடும் மாடும் ———.
(2) வண்டுகள் ———.
(3) வானம்பாடிகள் வயலிலிருந்து ———.
(4) புஸ்தகங்கள் மேஜை மேல் ———.
(5) நாய்க்குட்டிகளும் பூனைக்குட்டிகளும் ———.
(6) பொன் நகைகள் பெட்டியில் ———.

# 11. தன் கையே தனக்கு உதவி

| | | |
|---|---|---|
| வானம்பாடி | வயல் | நெல்மணிகள் |
| பொரித்து | கஷ்டம் | அஞ்ச |
| அறுவடை | இரை | கூறின |
| தாய்ப்பறவை | உறவினர் | வெளியேறி |
| தலைசாய்ந்து | கதிர்கள் | பிறர் |
| பயனில்லை | சொல்லி விட்டு | சிந்தித்துக் கொண்டு |
| எதிர்பார்த்து | வெளியேறி விட்டன | முற்றுவது |

ஒரு வயலில் வானம்பாடி ஒன்று முட்டையிட்டுக் குஞ்சு பொரித்தது. நெற்கதிர் முற்றுவதற்குள் குஞ்சு

கள் வளர்ந்து பெரிதாயின. வானம்பாடியும் அதன் குஞ்சுகளும் நெல் அறுவடையை எதிர்பார்த்துப்

பயந்துகொண் டிருந்தன. தாய்ப்பறவை வெளியே போகும்போது, "குடியானவன் அறுவடையைப் பற்றி இங்கு வந்து ஏதாவது சொன்னுல் நீங்கள் என்னிடம் சொல்லுங்கள். அறுவடைசெய்வதாயிருந்தால் நாம் வெளியேபோய்விடுவோம்" என்று சொல்லி விட்டுப் போகும். ஒரு நாள் தாய்ப்பறவை வெளியே போயிருந்த சமயத்தில் குடியானவன் வயலுக்கு வந்து, "கதிர்கள் முற்றிவிட்டன. நாளைக்கு யாரை யாவது அழைத்துக் கொண்டுவந்து அறுத்து விடலாம்" என்று சொன்னுன். குஞ்சுகள் இதைக் கேட்டுக்கொண் டிருந்தன. தாய் வந்ததும் அவைகள் குடியானவன் பேசிக்கொண்டிருந்ததைக் கூறின. தாய்ப்பறவை, " குழந்தைகளே, அஞ்சவேண்டியதில்லை. குடியானவன் பிறரை நம்பியுள்ளான். நாளைக்கு அறுவடையாகாது" என்றது.

மறுநாள் தாய்ப்பறவை வெளியே போனபோதும் குடியானவன் சொல்வதைக் கேட்டுவைக்கும்படி சொல்லிச் சென்றது. குடியானவனும் வயலுக்கு வந்தான். கதிர்கள் தலைசாய்ந்து இருப்பதைக் கண்டு, "ஆள் கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது. நாளைக்கு நம்முடைய உறவினரை அழைத்துவந்து அறுவடை செய்வோம்" என்று தன்னேடு வந்த தன் மகனிடம் சொன்னுன். மகனும் "அப்படியே செய்வோம், அப்பா" என்முன். இருவரும் போய்விட்டார்கள்.

தாய்ப்பறவை மறுநாள் இரைதேட வெளியே போனபோதும் முன் சொன்னபடியே சொல்லிவிட்டுப்

போயிற்று. குஞ்சுகளும் குடியானவனை எதிர்பார்த்துக்கொண் டிருந்தன.

குடியானவனும் அவன் மகனும் வயலுக்கு வந்தார்கள். உறவினர் யாரும் அறுவடை செய்ய வரவில்லை. நெல் மணிகள் கதிர்களிலிருந்து கீழே சிந்திக்கொண்டிருந்தன. குடியானவன் இதைப்பார்த்து வருந்தினான். அவன் தன் மகனைப் பார்த்து, "மகனே, நமக்கு நம் கையே உதவி. பிறரை எதிர் பார்ப்பதில் பயனில்லை. நாமே வந்து அறுத்து விடலாம்" என்று சொன்னான்.

குஞ்சுகள் தாய்ப்பறவை வந்ததும், "குடியானவனும் அவன் மகனும் நாளைக்கு வந்து அறுவடை செய்யப் போவதாகப் பேசினார்கள்" என்று சொல்லின. வானம்பாடி, "இனிமேல் நாம் இங்கே இருப்பது முடியாது. குடியானவன் தன் கையே தனக்கு உதவி என்பதைத் தெரிந்துகொண்டான். நாம் போவோம்" என்று சொல்லிற்று.

அன்று மாலை வானம்பாடி தன் குஞ்சுகளோடு அந்த வயலை விட்டு வெளியேறிவிட்டது.

## கேள்விகள்

(1) குடியானவன் மூன்றும்முறை என்ன சொன்னான்?
(2) தாய்ப்பறவை தன் குஞ்சுகளுடன் ஏன் வயலைவிட்டுப் போயிற்று?
(3) தன்கையே தனக்கு உதவி என்பதற்குப் பொருள் என்ன?
(4) வானம்பாடியும் குடியானவனும் என்பதுபற்றி 6 வாக்கியங்கள் எழுது.

பயிற்சி

கண்ணுடி பார்த்துக் கீழ்வருபவைகளை உச்சரி:—

(1) பொரித்து, இரை, வரி, கரை, தரை, நரை, அறுவடை பறவை, உறவினர், கூறின, வெளியேறின, பிறர்.

(2) குடியானவன் சொல்கிறுன்; குடியானவன் என்ன திணை? உயர்திணை. குடியானவன் உயர்திணையாயிருக்கும் போது அவனைப்பற்றிய வினைச்சொல்லும் உயர்திணை யாகவே இருத்தல்வேண்டும். குடியானவன் சொல் கிறது என்பது சரியாகாது. குடியானவன் சொல் கிறுன் என்பதே சரியானது.

வினைச்சொல்லில் அர்த்தம் முடிந்த வினைச்சொல்லை வினை முற்று என்போம். அதில் ஆணுக்கு உரிய வினை முற்றும் பெண்ணுக்கு உரிய வினைமுற்றும் உண்டு.

கீழ்வரும் பெயர்ச்சொல்லுக்கு ஏற்ற வினைச்சொல் போட்டு எழுது:—

(1) வேலைக்காரன் வேலை செய் ......... .

(2) வேலைக்காரி சாமான் துலக்கு ......... .

(3) வேலைக்காரன் வேலைக்காரியோடு கடைக்குப் போகி .... .

(4) ஜானகி ராமனேடு நீ வீட்டுக்கு ஓடு ......... .

(5) மகன் தகப்பனேடு பேசு ......... .

(6) அண்ணன் என்னுடன் வரு ......... .

(3) வினைச்சொல்லில் பன்மை வினைமுற்றும் உண்டு. அந்த வினைமுற்று வந்தால் ஆண்பெண் கண்டு பிடிக்க முடியாது. ஆண்பலர் இருக்கலாம்; பெண்பலரா யிருக்கலாம். ஆண் பெண் கலந்த பலர் இருக்கலாம்.

கீழ் வருபவைகளில் ஏற்ற பலர்பால் வினை முற்றுப் போடு :—

பாடுகிறவர்கள் தண்ணீர் குடிக்கிறார்கள்.

(1) பிள்ளைகள் பாடம் ———.

(2) பெண்கள் கோலம் ———.

(3) பிள்ளைகளும் பெண்களும் கோயிலுக்குப் போகி———.

(3) கீழ்வரும் வாக்கியங்களைச் சேர்த்து எழுது :—

(1) தகப்பன் வயலுக்கு வருகிறான்.
மகன் வயலுக்கு வருகிறான்.

(2) அக்காள் என்னோடு வருகிறாள்.
தங்கை என்னோடு வருகிறாள்.

(4) என் தகப்பனார் என்னுடன் வருகிறார்:—தகப்பனார் ஒருவரே. ஆனால் தகப்பன் என்பதற்குப் பதிலாக தகப்பனார் என்று சொல்கிறோம். மரியாதைக்காக இப்படிச் சொல்கிறோம்.

கீழ் வருபவைகளை மரியாதைப் பன்மையாக மாற்று :—

1. உபாத்தியாயன் பாடம் கற்பிக்கிறான்.
2. என் தாய் எனக்குச் சோறு ஊட்டுகிறாள்.
3. பெரியவன் வீட்டில் இருக்கிறான்.

(5) கீழ் வருபவைகளைச் சேர்த்து எழுது :—

தாய் + பறவை =
நாய் + குட்டி =
வாழை + பழம் =
பூனை + குட்டி =

(6) கீழ் இருப்பவைகளில் ஒருமைப்பெயர், பன்மைப்பெயர், ஒருமை வினைமுற்று, பன்மை வினைமுற்று ஆகிய இவைகளைக் கண்டுபிடி :—

(1) வானம்பாடி குஞ்சு பொரித்தது.
(2) குஞ்சுகள் பயந்துகொண்டிருந்தன.
(3) குடியானவன் வயலுக்கு வந்தான்.
(4) சமையல்காரி சமைக்கிறாள்.
(5) குடியானவர்கள் வேலை செய்கிறார்கள்.
(6) தமையனார் வீட்டில் இருக்கிறார்.

## 12. தேசபந்து சித்தரஞ்சன தாசர்

| | | |
|---|---|---|
| பிறந்தார் | தேசபந்து | சித்தரஞ்சனதாசர் |
| வங்காளம் | நவம்பர் | பாரிஸ்டர் |
| இங்கிலாந்து | பரீட்சை | மனவுறுதி |
| மோஹனதாசர் | தேறியபின்பு | மஞ்சலா |
| தகப்பனர் | திறமை | பத்திரிகை |
| லக்ஷம் | மாணவர்கள் | இன்ஸால்வெண்ட் |
| நியாயவாதி | அர்ப்பணம் | வரும்படி |

சித்தரஞ்சனதாசர் வங்காள நாட்டில் 1870-ம் வருஷம் நவம்பர் மாதம் 5-ந்தேதி பிறந்தார். இவ

ருடைய தகப்பனர் பெரிய நியாயவாதி. அவர் இவரை நன்ருகப் படிக்க வைத்தார். இவரும்

நன்ருக இந்தியாவில் படித்துவிட்ட பின்பு இங்கிலாந்துக்குப் போனார். இவர் அங்கே பாரிஸ்டர் பரீட்சையில் தேறிய பின்பு 1893-ம் வருஷம் தாய்நாடு வந்துசேர்ந்தார்.

தாசர் பாரிஸ்டர் வேலையில் சிறந்து விளங்கினர். இவ்வேலையில் இவருக்கு மாதவரும்படி இரண்டு லக்ஷ ரூபாய் கிடைத்ததாம். இவருடைய தகப்பனராகிய பாபு மோஹனதாசர் பல பத்திரிகைகள் நடத்திப் பெரிய நஷ்டமடைந்து கடன்காரரானார். இதனால் அவர் இன்ஸால்வெண்ட் ஆனார். சித்தரஞ்சனர், "இப்பெரிய அபகீர்த்தி நம் குடும்பத்திற்கு உண்டாயிற்றே. இதை எப்படியாகிலும் நீக்கக் கடன் முழுதும் கொடுத்துவிடுவேன்" என்று மனவுறுதி செய்து கொண்டார். இதனால் இவர் அதிகமாகப் பாடுபட்டுத் தம் தந்தைபட்ட கடன்காரர்களுக்குச் சேரவேண்டிய பதினறு லக்ஷம் ரூபாயையும் கொடுத்துத் தம் தகப்பனரை அந்த அபகீர்த்தியிலிருந்து விடுதலை செய்தார். இது அல்லவா நல்ல பிள்ளையின் கடமை?

சித்தரஞ்சனர் தம்முடைய தாய்மொழியிலும் அன்பு உடையவராயிருந்தார். வங்காள மொழியில் கவிபாடும் திறமை இவருக்கு இருந்தது. பல பாட்டுகள் அடங்கிய மஞ்சலா என்னும் செய்யுள் நூல் இவரால் செய்யப்பட்டது. இவரது தாய்மொழிப் பற்றை என்ன என்று கூறுவது!

தாசர் இரண்டு லக்ஷம் ரூபாய் சம்பாதிக்கக்கூடிய வேலையை விட்டுவிட்டுத் தேச விடுதலைக்கு உழைத்தார். இவர் சுயராஜ்யக் கட்சியை ஏற்படுத்தி அக்காலத்தில் தாய் நாட்டிற்காகப் பாடுபட்டார். தேசத்துக்காக இவர் தமது உடல்பொருள் ஆவியையும் அர்ப்பணம் செய்தார்.

இவர் அதிக இரக்கமுள்ளவர். இவரிடம் பொருள் பெற்றுப் படித்து முன்னுக்கு வந்த மாணவர்கள் பலர். இப்படிப்பட்ட சித்தரஞ்சனர், அந்தோ! 1925-ம் வருஷம் ஜூன் மாதம் ஆரும் தேதி செவ்வாய்க்கிழமை மாலை இந்தியர் எல்லாரும் கண்ணீர் விட்டுக் கதறி அழ இறந்துபோனுர்.

## கேள்விகள்

(1) சித்தரஞ்சன தாசர் எந்த நாட்டினர்? அவர் எத்தனை வருஷங்களுக்குமுன் இருந்தவர்?

(2) அவருடைய தந்தையார் யார்? அவர் பெயர் என்ன?

(3) சித்தரஞ்சனர் தம் தந்தைக்குச் செய்த கடமை என்ன?

(4) அவர் செய்த செய்யுள் நூலின் பெயர் என்ன?

(5) சித்தரஞ்சனருடைய குணங்களைப்பற்றி ஆறு வாக்கியங்கள் எழுது.

## எதிர் வார்த்தை

கீர்த்தி × அபகீர்த்தி

## பயிற்சி

(1) தேறினுர், நியாயவாதி, நீதிபதி, அபகீர்த்தி, திறமை, அர்ப்பணம் — ஒவ்வொரு வார்த்தையையும் வைத்து ஒவ்வொரு வாக்கியம் எழுது.

(2) கீழ்வருபவைகளைச் சேர்த்தெழுது:—

| | | |
|---|---|---|
| இவர் | + உடைய | = இவருடைய |
| கடன்காரர் | + ஆனார் | = |
| அபகீர்த்தியில் | + இருந்து | = |
| இரக்கம் | + உள்ளவர் | = |
| வீட்டின் | + உள்ளே | = |
| பாடம் | + எழுதினான் | = |
| கால் | + ஒடிந்தது | = |
| தேன் | + எடுத்தான் | = |
| நால்வர் | + இருந்தார் | = |

(3) அவன் நேற்றுவந்தான். அவன் இன்று வருகிறான். அவன் நாளைக்கு வருவான். — வந்தான், வருகிறான், வருவான்.— இந்த மூன்று வினைச்சொற்களும் காலங்களைக் காட்டும்.




| இறந்த காலம் | நிகழ் காலம் | எதிர் காலம் |
|---|---|---|
| வந்தான் | வருகிறான் | வருவான் |
| வந்தது | வருகிறது | வரும் |

(4) கீழ்வரும் சொற்களிலிருந்து மூன்றுகால வினைச்சொற்களைக் கண்டுபிடித்து எழுது:—

(1) நீ இதற்குமுன் என்ன படித்தாய்?

(2) நீ இப்பொழுது எந்தப்பாடம் படிக்கிறாய்?

(3) நாளைக்கு எந்தப்பாடம் படிப்பாய்?

(4) நான் நேற்று இராமனோடு ஆடினேன்.

(5) நான் இப்பொழுது வேலனோடு ஆடுகிறேன்.

(6) நான் கோவிந்தனோடு ஆடுவேன்.

(7) என் அப்பா நேற்று ஒருபடம் கொடுத்தார்.

(8) அப்பா இப்போது பாடம் கற்றுக்கொடுக்கிறார்.

(9) அப்பா நாளைக்குச் சம்பளம் கொடுப்பார்.

# 13. நமது தலை நகரம்

| | | |
|---|---|---|
| மதராஸ் | சிற்பங்கள் | இராமேஸ்வரம் |
| சென்னை | மலைச்சாலை | திருவல்லிக்கேணி |
| மதுரை | திருவனந்தபுரம் | திருவொற்றியூர் |
| ஆட்சி | சதுரமைல் | மிருகக் காட்சிச்சாலை |
| காட்சி | ஏராளமாக | திரிச்சிராப்பள்ளி |
| சிவ | சௌகரியம் | ஜார்ஜ் கோட்டை |
| அற்புதமான | புண்ணியஸ்தலம் | கண்வைத்தியசாலை |
| அழகான | ஸ்ரீரங்கராயர் | ஜெனரல் ஆஸ்பத்திரி |
| மாகாணம் | போர்த்துகீசியர் | மூன்நூறு |
| க்ஷேத்திரம் | மயிலாப்பூர் | திருநெல்வேலி |

பிள்ளைபெறும்வைத்தியசாலை



சென்னை ஜார்ஜ் கோட்டை

சென்னை நமது மாகாணத்துத் தலைநகரம். இது கடற்கரையில் இருக்கிறது. அதனால் இதைச்

சென்னைப்பட்டினம் என்று சொல்லவேண்டும். இதற்குச் சென்னை என்றும் மதருஸ் என்றும் பெயர்கள் உண்டு. இப்பட்டினம் முந்நூறு ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்டது.

இது முந்நூறு ஆண்டுகளுக்கு முன் மீன் பிடிக்கும் சிறு கிராமமாய் இருந்தது. அப்போது போர்த்துகல் தேசத்து வியாபாரிகள் சிலர் சென்னையிலிருந்துகொண்டு வியாபாரம் செய்துவந்தார்கள். அவர்களில் ஒருவர் மதருஸ் என்பவர். அவருடைய பெயர் இப்பட்டினத்திற்கு வந்தது. ஆங்கிலேயர்கள் இதை ஸ்ரீரங்கராயரிடமிருந்து குத்தகைக்கு வாங்கினார்கள். ஸ்ரீரங்கராயருடைய தகப்பனார் பெயர் சென்னப்ப நாய்க்கர் என்பது. டே என்பவர் ஆங்கிலேயர் சார்பாக இதை வாங்கினார். அவர் சென்னப்பன் பெயரை இப்பட்டினத்திற்கு வைத்தார். இப்போது இது பெரியபட்டினமாகிவிட்டது. இந்தப் பட்டினத்தில் இப்போது ஆறு லட்சம் ஜனங்கள் வசிக்கிறார்கள். இதன் சுற்றளவு இருபத்தேழு சதுரமைல் ஆகும்.

சென்னைப்பட்டினத்திற்கு அருகே தெற்கில் மயிலாப்பூர் என்ற புண்ணிய சிவ க்ஷேத்திரமும் வடக்கே திருவொற்றியூர் என்ற சிவ க்ஷேத்திரமும் நடுவில் திருவல்லிக்கேணி என்ற வைஷ்ணவ ஸ்தலமும் இருக்கின்றன.

சென்னைப்பட்டினத்தில் மின்சாரவண்டி ஓடுகிறது. மோட்டார் பஸ் வண்டிகளும் ஏராளமாக

ஓடுகின்றன. சென்னையில் ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப்போக வண்டிச் சௌகரியம் உண்டு.

சென்னையில் மிருகக்காட்சிச்சாலையும் பொருட்காட்சிச்சாலையும் உண்டு. மிருகக்காட்சிச்சாலையில் பலவகையான மிருகங்களைக் காணலாம். பொருட்காட்சிச்சாலையில் பதம்பண்ணப்பட்ட இறந்த பிராணிகள், பலவிதக் கல்கள், பழைய சிற்பங்கள் முதலியவை வைக்கப்பட்டுள்ளன. கடற்கரையில் மீன் காட்சிச்சாலை உண்டு. அங்கே நாம் பல அற்புதமான மீன்களைப் பார்க்கலாம்.

மூன்று முக்கியமான பெரிய மருத்துவசாலைகள் சென்னையில் உண்டு. ஒன்று ஜெனரல் ஆஸ்பத்தரி என்னும் வைத்தியசாலை; மற்றொன்று கண் வைத்திய சாலை; இன்னொன்று பிள்ளைபெறும் வைத்தியசாலை.

கடற்கரைச்சாலையில் பல அழகான கட்டிடங்களைப் பார்க்கலாம். கடற்கரைப் பக்கத்திலேதான் செயின்ட் ஜார்ஜ் கோட்டையும் இருக்கிறது. மவுன்ட் ரோட் என்னும் மலைச்சாலையில் பெரிய வணிக சாலைக் கட்டிடங்கள் உண்டு. இங்கேதான் கவர்னர் மாளிகை இருக்கிறது.

சென்னையில் வியாபாரம் அதிகமாக நடைபெறும் இடம் ஜார்ஜ் பட்டணம் என்பது. இங்கே நீதிமன்றக் கட்டிடங்கள் இருக்கின்றன. ஜார்ஜ் பட்டணத்தில் துறைமுகம் உண்டு. இது சிறந்த

துறைமுகம். கப்பலிலிருந்து இறங்கவேண்டியவர்கள் இங்கேதான் இறங்குவார்கள்.



சென்னை உயர்நீதி மன்றம்

சென்னையில் பச்சையப்பன் கல்லூரி, சென்னை மாகாணக் கல்லூரி, மேரிராணியார் பெண் கல்லூரி முதலிய பெரிய பள்ளிக்கூடங்களும் நூற்றுக்கணக்கான சிறிய பள்ளிக்கூடங்களும் உண்டு. மெரிநா கடற்கரைச்சாலையில் சென்னைச் சர்வகலாசாலைக் கட்டிடங்களும் புத்தகசாலையும் இருக்கின்றன.

செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்குள் மாகாண ஆட்சிச் சபைகள் இருக்கின்றன. இங்கேதான் மந்திரிமார்களும் ஆட்சிச்சபை அங்கத்தினர்களும் அமர்ந்து நாட்டை ஆள்வதும் சட்டங்கள் போடுவதும் செய்கிறார்கள்.

சென்னையில் இரண்டு பெரிய இருப்புப்பாதை நிலையங்கள் இருக்கின்றன. ஒன்று தென்னிந்திய மராட்டா ரயில் நிலையம். டில்லி, பம்பாய், கல்கத்தா முதலிய வடநாட்டு நகரங்களுக்குப் போகவேண்டிய

வர்கள் இங்கேதான் வண்டி ஏறவேண்டும். மற்ருெரு பெரிய வண்டி நிலையம் தென்னிந்திய ரயில்வே நிலையம். காஞ்சீபுரம், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, திருவனந்தபுரம், இராமேஸ்வரம் போகவேண்டியவர்கள் இங்கே ஏறவேண்டும்.

சென்னை கல்விக்கு உறைவிடம். இந்த மாகாணத்தில் இருக்கும் கற்றவர்களில் பலர் இங்கு வந்து வேலைசெய்து பிழைக்கிருர்கள். அறிவு சம்பாதிப்பதற்கு ஏற்ற இடம் சென்னையே. சென்னை வாசிகள் சமாதானத்திலும் அன்பிலும் நம்பிக்கை உடையவர்கள். சென்னையைக் காணுதவர்கள் ஒருமுறை கட்டாயம் காணவேண்டும்.

## கேள்விகள்

(1) சென்னைக்கு எப்படி மதருஸ் என்னும் பெயர் வந்தது?

(2) சென்னையிலும் சென்னைக்குப் பக்கத்திலும் உள்ள க்ஷேத்திரங்கள் எவை?

(3) நீ சென்னைக்குப் போனுல் எவற்றைப் பார்ப்பாய் என்று எழுது.

(4) சென்னையில் உள்ள இருப்புப் பாதைத் தலைநிலையங்கள் எவை?

## எதிர் வார்த்தை

சௌகரியம் × அசௌகரியம்

## பயிற்சி

(1) காட்சி, ஆட்சி, மாட்சி - இந்த வார்த்தைகளை எழுது.

(2) சேர்த்தெழுது :—

இந்த + பட்டினம் = இந்தப் பட்டினம்
அந்த + செடி =
எந்த + குடம் =
அப்படி + பேசினன் =
இப்படி + கேட்டாள் =
எப்படி + சொன்னன் =
அங்கு + போனர் =
இங்கு + கொடுத்தாள் =
எங்கு + காட்டினர் =

(3) நீ சென்னைக்குப்போய் வந்ததுபோலப் பத்து வாக்கியங்கள் எழுது. வினைச்சொற்கள் இறந்த காலத்தில் இருக்கவேண்டும்.

(4) பெரிய வியாபாரிகள் சென்னையில் இருக்கிறார்கள். இது ஒரு வாக்கியம். இது எப்படித் தெரிகிறது? வினைமுற்றுக்குப் பின்னல் என்ன பார்க்கிறாய்? முற்றுதல் அல்லது முடிந்ததைக் காட்டுவதற்கு உள்ள புள்ளிக்கு என்ன பெயர்?

(5) முற்றுப்புள்ளி ஏன் போடவேண்டும்? முற்றுப் புள்ளி போட்டு இரண்டு வாக்கியங்கள் எழுது.

பயிற்சி



மேலே உள்ள படங்களைப் பார்த்துக் கதை எழுது.

# 14. நல்ல மளிகைக் கடை

மளிகைக்கடை
மாதந்தோறும்
சம்பளம்
கைக்குத்தல்
மிஷன்குத்தல்
உத்தர விட்டார்
தகர டப்பி
வெங்காயம்
துவரம்பருப்பு
கடலைப்பருப்பு
உளுத்தம்பருப்பு
மொச்சைக்கொட்டை
சோயாபீன்ஸ்
முழுக்கடலை
பருப்பு வகைகள்
ஒன்றரையணா
உண்மையானவன்
அரைவீசை
சர்க்கரை
பொட்டலங்கள்
நல்லெண்ணெய்
மண்குடங்கள்
கடுகு
சீரகம்
பூண்டு
மிளகு
வெந்தயம்
மிளகாய்
புளி
மோசம்

| | |
|---|---|
| கோணிப்பைகள் | மரியாதை |
| சமையற்காரன் | வியாபாரி |
| அரிசிமூட்டை | பணக்காரன் |

எங்கள் அப்பாவுக்கு மாதந்தோறும் முதல் தேதி சம்பளம் வரும். அவர் வீட்டுக்கு வேண்டிய சாமான்களை வாங்குவதற்கு ரூபாயை எங்கள் தாயாரிடத்தில் கொடுத்துவிடுவார். எங்கள் தாயார் என்னை மளிகைச் சாமானும் அரிசியும் வாங்கி வரும்படி சொல்வார். நாங்கள் கைக்குத்தல் அரிசிதான் வாங்குவது வழக்கம். மிஷன் குத்தல் அரிசியை வாங்கக் கூடாது என்று எங்கள் தகப்பனுர் கண்டிப்பான உத்தரவிட்டிருக்கிருர். ஒரு கடைக்காரன்தான் மாதந்தோறும் கைக்குத்தல் அரிசி விற்கிருன். நான் அந்தக் கடையில்தான் மளிகைச் சாமான்களையும் வாங்குவதுண்டு.

மற்றக் கடைகளைவிட அந்தக் கடை சுத்தமாக இருக்கும். ஈக்கள் மொய்க்காதபடி சாமான்கள் மூடி வைக்கப்பட்டிருக்கும். சர்க்கரை ஒரு வீசை, அரை வீசைப் பொட்டலங்களாகக் கட்டி வைக்கப்பட்டிருக்கும். வேலைக்காரர்கள் பெரும்பாலும் சாமான்களைத் தரையில் சிந்துவதில்லை. சுத்தமான நல்லெண்ணெய் மண் குடங்களில் வைக்கப்பட்டு மூடப்பட்டிருக்கும். கடுகு, சீரகம், பூண்டு, மிளகு, வெந்தயம், கறிமஞ்சள் ஆகிய இவைகளில் ஒவ்வொன்றும் தகர டப்பிகளில் இருக்கும். அக்கடையில் அழுகின வெங்காயம் விற்பதேயில்லை. துவரம்பருப்பு, கடலைப்பருப்பு, உளுத்தம் பருப்பு, மொச்சைக்கொட்டை, சோயாபீன்ஸ், முழுக்

கடலை முதலிய பருப்பு வகைகள் கோணிப் பைகளில் இருக்கும். மிளகாய், புளி முதலியவைகள் அங்கே நல்லவைகளாகக் கிடைக்கும். விலை கருர் விலை.

நான் அரிசி பத்து ரூபாய்க்கும், மிளகாய், புளி முதலிய சாமான்களும் பருப்பு வகைகளும் இரண்டு ரூபாய் பதினன்கு அணுவிற்கும், இரண்டு வீசை சர்க்கரையும் கோக்கோ டப்பியும் ஒரு ரூபாய் ஐந்தரை அணுவுக்கும் வாங்கினேன். கடையாள் அரிசியைக் கோணிப்பையில் போட்டான்; மற்றச் சாமான்களைப் பொட்டலங்களாகக் கட்டி வைத்தான்.

கடைக்காரன் வாங்கின சாமான்களை எழுதி ஒவ்வொன்றுக்கும் விலை போட்டு ஒரு சீட்டுக் கொடுத்தான். பதினன்கு ரூபாய் மூன்று அணு ஆறு பை என்று கணக்கு எழுதியிருந்தது. நானும் கூட்டிப் பார்த்தேன். என்னுடன் வந்த எங்கள் சமையற்காரனும் கூட்டிப் பார்த்தான். நான் பதினைந்து ரூபாயைக் கடைக்காரன் கையில் கொடுத்தேன். அவன் பதின்மூன்று ரூபாய் மூன்று அணு ஆறு பை எடுத்துக்கொண்டு மீதி ஒரு ரூபாய் பன்னிரண்டரை அணு கையில் கொடுத்தான்.

அங்கே ஒரு கூலியாள் இருந்தான். அவன் அரிசியை எடுத்துக்கொண்டு வந்தான். கூட வந்த சமையற்காரன் மற்றச் சாமான்களை எடுத்து வந்தான். நான் அரிசி மூட்டை கொண்டுவந்தவனுக்கு ஒன்றரை அணு கொடுத்தேன்.

நான் சாமான் வாங்கிய கடைக்காரன் உண்மையானவன். அவனுடைய கடையில் நல்ல சாமான்கள் கிடைக்கும். எண்ணெய், நெய் வகைகளில் மோசமே கிடையாது. அவராகிலும் அவர் ஆட்களாகிலும் ஒருவரையும் ஏமாற்றுவதில்லை. அவர் வருபவரிடம் மரியாதையாகப் பேசுபவர். அதனால் பலர் அவர் கடையில் சாமான் வாங்குகிறார்கள். ஏழையாய் இருந்த அவர் தம் உண்மையான குணத்தாலே இப்போது பெரிய பணக்கார வியாபாரியாய் இருக்கிறார்.

## கேள்விகள்

(1) தகப்பனார் இட்ட கண்டிப்பான உத்தரவு யாது?

(2) ஈக்கள் மொய்க்காதபடி வைத்திருக்க வேண்டுமானால் என்ன செய்வாய்?

(3) மளிகைக் கடையில் உள்ள பொருள்களின் பெயர்களில் சிலவற்றைச் சொல்.

(4) கடைக்காரன் அரிசி, எண்ணெய், வெல்லம் இவைகளை எப்படித் தருவான்?

(5) மூட்டையாகக் கட்டும் வஸ்துக்கள் நான்கு சொல்லு.

(6) நிறுப்பதற்கு உரிய பொருள்கள் நான்கு கூறு.

(7) முகத்தல் அளவிற்கு உரிய பொருள்கள் நான்கு சொல்.

(8) வியாபாரிக்கு இருக்கவேண்டிய முக்கியமான குணம் யாது?

## பயிற்சி

(1) மாதந்தோறும்—இதை ஒரு வாக்கியத்தில் அமைத்து எழுது.

(2) எண்ணெய், நெய், முந்நூறு, அரிசி, நானூறு, சீரகம், பதினைந்து, உத்தரவு, பணக்காரர், பதினான்கு-இவை களை எழுது.

(3) கீழ் வருபவைகளைப் பிரித்தெழுது :—

மாதந்தோறும் = மாதம் + தோறும்
பழந் தின்றான் =
பணங் கொடுத்தான் =
தருமஞ் செய்தான் =

(4) கீழ் வருபவைகளைச் சேர்த்தெழுது :—

அறம் + செய்தான் = அறஞ்செய்தான்
தருமம் + கொடு =
வரம் + தருவாய் =
பொட்டலம் + கொடு =

(5) சரியான இடங்களில் புள்ளிகளைப் போடு.

ஒரு காட்டில் ஒரு சிங்கம் இருந்தது அங்கே நான்கு எருது கள் ஒன்றாய் வசித்து வந்தன அவைகளைச் சிங்கம் கொல்ல முடியாமல் இருந்தது எருதுகளுக்குள் சண்டை உண்டாயிற்று அதனால் எருதுகள் பிரிந்துபோயின. சிங்கம் எருதுகள் தனித் தனியாக இருப்பதைக் கண்டது உடனே சிங்கம் எருதுகளை ஒவ்வொன்றாகக் கொன்று தின்றது.

# 15. சென்னை பேசுகிறது.

| | |
|---|---|
| சென்னை | சித்தமாய் |
| டாக்டர் | வெளிச்சம் |
| சாமிநாத ஐயர் | நிறுத்திவிட |
| ரேடியோ | வெட்டவெளி |
| நெல்லையப்பன் | ஒலி அலைகள் |
| குற்றாலம் பிள்ளை | கருவிகள் |
| கண்டுபிடிக்க | வகையில் |
| குறிப்பிட | பெரிதாக |
| விஷயம் | ஆச்சரியம் |
| கண் வைத்தியசாலை | பிரயோஜனம் |
| வானொலி நிலையம் | கப்பல் தலைவன் |
| வேலைபார்ப்பவர் | உலகச் செய்திகள் |
| உரிய சைகை | கண்டு பிடித்தவர் |
| குறித்த நேரம் | தெரிந்து கொண்டேன் |
| தவறுவதில்லை | மார்க்கோனி |
| வெவ்வேறு | |

ரேடியோமாமா—சென்னை பேசுகிறது. டாக்டர் சாமிநாத ஐயர் அவர்கள் மாணவர்கள் நடந்து கொள்ளவேண்டிய முறைகளைப்பற்றிப் பேசுவார்.

நெல்லையப்பன்—அப்பா, ஏன் எப்பொழுதும் சென்னை பேசுகிறது என்று ரேடியோவில் கேட்கிறோம்.

**குற்றலம் பிள்ளை**—பல ஊர்களிலிருந்து பேசினலும் ரேடியோவில் கேட்கலாம். எந்த ஊரிலிருந்து பேசுவது என்பது கண்டுபிடிக்க முடியாது. அதனல் இன்ன இடத்திலிருந்து விஷயம் பேசப்படுகிறது என்பதைக் குறிப்பிடவே ரேடியோ மாமா 'சென்னை பேசுகிறது' என்று சொல்கிருர்.



நே—சென்னையில் எங்கிருந்து ரேடியோ மாமா பேசுகிருர்?

கு. பி.—சென்னையில் எழும்பூர் என்ற இடம் இருக்கிறது. அங்கே கண் வைத்தியசாலை ஒன்று உண்டு. அந்தக் கண் வைத்தியசாலைக்குச் சிறிது தள்ளி எதிரே அகில இந்திய வானெலி நிலையம் ஒன்று இருக்கிறது. அங்கே வானெலிக் கருவி வைக்கப்பட்டிருக்கிறது. அங்கிருந்துதான் செய்தி வருகிறது.

நே—எப்படி அங்குப் பேசுவார்கள் ?

து. பி.—வானொலி நிலையத்தில் பேசுவதற்கு என்றும் பாடுவதற்கு என்றும் சத்தம் வெளிப்போகாத முறையில் அறைகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு அறையிலும் ஒவ்வொரு பேசு கருவி உண்டு. அதற்கு முன்னே பேசுகிறவர் உட்கார்ந்து பேசவேண்டியதைப் படிப்பார். அது நமக்குக் கேட்கிறது. எதிரே ஒருவர் உட்கார்ந்திருப்பார். அவர் ரேடியோ நிலையத்தில் நடக்கவேண்டியதை நடத்துவதற்காக வேலை பார்ப்பவர். அவரையே ரேடியோ மாமா என்றேன். அவர் பேசுகிறவர்கள் குறித்த நேரத்திற்குள் பேசவேண்டியதைப்பேசி முடிப்பதற்கு உரிய சைகை காட்டி உதவி செய்வார். அங்கே பேசுவதுதான் இங்கே கேட்கிறது.

நே—அப்பா, பேச்சு ஆனதும் பாட்டு வருகிறது. குறித்த நேரம் தவறுவதில்லை. இப்படிச் செய்வது எப்படி முடியும் ?

து. பி.—ஒரே அறையில் ஒன்றுக்குப்பின் மற்றொன்றை நடத்த விடுவதில்லை. வெவ்வேறு அறைகள் உண்டு. ஓர் அறையில் பேச ஒருவர் தயாராய் இருப்பார். மற்றோர் அறையில் பாடுகிறவர்கள் சித்தமாய் இருப்பார்கள். பேசுகின்ற விஷயம் முடிந்தாலும் முடியாவிட்டாலும் குறித்த நேரம் ஆனதும் சிவப்பு விளக்கு வெளிச்சம் வீசும். பேசுபவர் பேசுவதை உடனே நிறுத்திவிட

வேண்டும். உடனே பாட்டு அறையில் பாட்டு ஆரம்பிக்கப்படும்.

நே—நம் அருகில் பேசுவதுபோல் கேட்கிறதே, எப்படி அது முடிகிறது?



ஆ. பி—ஒருவர் வெட்டவெளியில் நின்று பேசினல் அவர் பேசுவது எப்படி மற்ற ஜனங்களுக்குக் கேட்கிறது? சத்தம் நேராக வந்து காதில் விழு கிறதல்லவா? கடலில் அலை வீசுவதைப் பார்த் திருக்கிருய். அதுபோல ஒலி அலைகளும் உண்டு. ஒலி அலைகள் வெகு சீக்கிரத்தில் ஒருவர் பேசு வதை மற்ருேர் இடத்திற்குக் கொண்டுபோகிறது. இந்த ஒலி அலைகளை வாங்குவதற்குக் கருவிகள் உண்டு. அந்தக் கருவி ஒலி அலைகளை வாங்கி அவைகளை நாம் கேட்கும் வகையில் பெரிதாக்கி விடுகிறது. நாம் அதைக் கேட்கிருேம்.

நே—என்ன ஆச்சரியம்! ஓர் இடத்தில் பேசுவது உலகமெல்லாம் கேட்கிறது. பாடத்தான் உதவுமா? வேறு எதற்கும் அது பயன்படுமா?

து. பி—அப்பாடா ரேடியோவால் பல பிரயோஜனங்கள் உண்டு.

நே—என்ன? அப்பா, சொல்லுங்கள்.

து. பி—கப்பல் கடலில் முழுகிப்போவதா யிருந்தால் கப்பல் தலைவன் கப்பல் ஆபத்தில் இருப்பதைப் பக்கத்தில் உள்ள ரேடியோ நிலையங்களுக்குத் தெரிவிப்பான். உதவி உடனே கிடைக்கும். கப்பலில் உள்ளவர்கள் காப்பாற்றப்படுவார்கள்.

நே—வேறு என்ன பயன்?

து. பி—அன்றன்று சாமான்களின் விலைகளைத் தெரிவிக்கும். உலகச் செய்திகளை உடனுக்குடன் ரேடியோவின் மூலமாய் வந்துகொண்டிருக்கும்.

நே—என்ன ஆச்சரியம்! யார் கண்டுபிடித்தாரோ?

து. பி—மார்க்கோனி என்பவர் பலதரம் முயன்று ரேடியோவைக் கண்டு பிடித்தார்.

நே—ரேடியோவைப்பற்றிப் பல விஷயங்கள் தெரிந்து கொண்டேன். வாருங்கள், அப்பா, போகலாம்.

கேள்விகள்

(1) ரேடியோவைக் கண்டு பிடித்தவர் யார்?

(2) பேசுகிறவர்கள் வானொலி நிலையத்தில் எப்படிப் பேசுகிறார்கள்?

(3) ஓர் இடத்தில் பேசுவது மற்றோர் இடத்தில் எப்படிக் கேட்கிறது?

(4) ரேடியோவால் ஏற்படும் நன்மைகள் என்ன?

எதிர் வார்த்தை

அருகில் × தூரம்

(1) கீழ் வருபவைகளைச் சேர்த்தெழுது :—

ஒரு + ஒரு = ஒவ்வொரு
வேறு + வேறு = வெவ்வேறு
பாதி + பாதி =

பயிற்சி

(2) கீழ் வரும் இரண்டு இரண்டு வாக்கியங்களைச் சேர்த்து எழுது :—

(1) நான் ரேடியோ கேட்டேன்.
என் அக்காள் ரேடியோ கேட்டாள்.
நாங்கள் ———— ————.

(2) உங்கள் அப்பா உன்னை அழைத்துக்கொண்டு போனார்.
உங்கள் அப்பா உன் தம்பியை அழைத்துக்கொண்டு போனார்.
உங்கள் அப்பா ————.

(3) கீழ் வரும் இரண்டு வாக்கியங்களைச் சேர்த்தெழுது :—

(1) என் தந்தையார் உலாவப் போனார்.
உன் பாட்டனார் உலாவப் போனார்.

(2) கம்பன் கவி பாடினார்.
கபிலர் கவி பாடினார்.

(4) அரை, அறை — இவைகளைத் தனித் தனி வாக்கியத்தில் அமைத்து எழுது.

(4) உன் பெயர் என்ன ?—இது ஒரு கேள்வி. இக் கேள்வியைத் தெரிவிப்பதற்காக உள்ள அடையாளம் எது ? இந்தக் குறி ? கைப்பிடி மாதிரி இல்லையா ? கேள்வியைக் காட்டும் குறிக்கு என்ன பெயர் வைக்கலாம் ?

(4) ரேடியோவைப் பற்றி நான்கு கேள்விகள் கேட்டுக் கேள்விக் குறிபோடு.

# 16. காகம்

| | | |
|---|---|---|
| விதமான | தங்கிய | குச்சிகள் |
| நீண்டு | கண்டதை | சப்தம் |
| நுனி | இன அபிமானம் | அழைத்து |
| கூர்மை | உட்பட்ட | பார்க்கலாம் |
| மண்ணை | கொத்தி | குயில் |
| கிளறுகிறது | சேகரிக்கும் | சூழ்ந்துகொண்டு |
| சாய்த்து | திறமை | |

இது எல்லாவிதமான பொருள்களையும் தின்னும். இதன் அலகு நீண்டு பலமாயும் அடியில் பருத்தும் நுனியில் கூர்மையாயும் இருக்கிறது. இதனால் இது குப்பையையும் மண்ணையும் நன்றாகக் கிளறுகிறது.



காகம் உட்கார்ந்திருக்கும் போது தலையை ஒரு பக்கம் சாய்த்துப் பார்ப்பதிலிருந்து இதற்கு ஒருகண்தான் இருக்கிறது என்று சொல்வதுண்டு. ஆனால், உண்மையில் இதற்கு இரண்டு கண்களும் உண்டு.

காகங்கள் மாலையில் இருண்டுபோவதற்கு முன்னே ஒன்றுகூடி மரங்களிலோ வீட்டு ஓடுகளிலோ உட்கார்ந்திருப்பதைப் பார்க்கலாம். காகங்கள் இப்படிச் செய்வதைக் காக்கைப் பள்ளிக்கூடம் என்று நாம் வேடிக்கையாகச் சொல்லுகிறோம். காக்கைகள், இப்படித் தங்கிய பிறகு அவைகள் வசிக்கும் மரங்களுக்குச் செல்லும்.

அவைகள் கால் விரல்களால் கிளைகளைச்சுற்றிப் பிடித்துக்கொண்டு தூங்கும். அவைகள் அதிகாலையில் எழுந்து கா, கா என்று கரையும்.

காகம் கண்டதைத் தின்னும் பறவையாயினும் அது தன் உடம்பைச் சுத்தமாக வைத்துக்கொள்கிறது. அது தண்ணீரில் ஒன்று அல்லது இரண்டு முறை குளிக்கும். ஆகாரம் கிடைத்தால் தன் இனத்தைக் கூவி அழைத்து உண்பதே காகத்தின் இயல்பு. அதற்கு இன அபிமானம் உண்டு. நொண்டிக் காகத்தையும், வியாதிக்கு உட்பட்ட காகத்தையும் மற்றக் காகங்கள் சூழ்ந்துகொண்டு கொத்திக் கொன்று விடுகின்றன.

காகங்கள் சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி மாதங்களில் கூடு கட்டி முட்டையிடும். ஆண் பெண் இரண்டும் கூட்டிற்கு வேண்டிய சாமான்களைச் சேகரிக்கும். காக்கையின் கூடு மரக்கிளைகளில் கட்டப்பட்டிருக்கும். அது கூட்டினுள் முட்டைகளுக்கு மிருதுவாக இருக்கும்படி புல்லையோ வைக்கோலையோ பரப்பும். ஆண் காக்கைக்குக் கூடு கட்டத் திறமையில்லை. பெட்டையே குச்சிகளை அடுக்கிக் கூடுகட்டும். கூடு கட்டிய பின் பெட்டை இரண்டு முதல் ஐந்து வரையில் முட்டையிடும். ஆணும் பெண்ணும் கூட்டில் உள்ள முட்டைகளைக் காவல் காக்கும். முட்டைகளிலிருந்து இரண்டு வாரங்களில் குஞ்சுகள் வெளிப்படும். மூன்று வாரங்கள் வரையில் குஞ்சுகள்

கூட்டைவிட்டு வெளியே போவதில்லை. அவைகள் தங்கள் தாயால் வெகு செல்வமாய் வளர்க்கப்படு கின்றன. காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு அல்லவா ?

குயிலுக்கு முட்டையிடத் தெரியாது. அது காக்கையினிடத்தில் செல்லும். காக்கை குயிலைத் துரத்திக்கொண்டு போகும். அந்தச் சமயத்தில் வேறு ஒரு குயில் தன் முட்டைகளைக் காகத்தின் கூட்டில் வைத்துவிட்டு ஓடிவிடும். காக்கையும் அவைகளை ஜாக் கிரதையாய்ப் பாதுகாக்கும். குயில்களுடைய முட்டையி லிருந்து குஞ்சுகள் வெளிப்படும். காக்கையே குயில் குஞ்சுகளையும் வளர்க்கும். காக்கையின் குஞ்சுகள் பறப்பதற்கு முன்னே இவைகள் பறந்து போய்விடும்.

கேள்விகள்

(1) காகத்தின் குணத்தைப்பற்றி ஆறு வாக்கியங்கள் எழுது.
(2) காகம் எந்த எந்த மாதங்களில் முட்டையிடும் ?
(3) எந்தக் காகம் கூடு கட்டும் ?
(4) காக்கையைப்பற்றிய பழமொழி ஒன்று கூறு.

எதிர் வார்த்தைகள்

| | | |
|---|---|---|
| உண்மை | × | பொய் |
| மாலை | × | காலை |
| மிருதுவாக | × | கடினமாக |
| நுனி | × | அடி |

பயிற்சி

(1) இல்லை, உண்டு, வேறு—இவற்றைவைத்துத் தனித் தனியே இரண்டு வாக்கியங்கள் எழுது.

(2) அது இல்லை. அவை இல்லை. அவன் இல்லை. அவள் இல்லை. அவர்கள் இல்லை. அது உண்டு. அவை உண்டு. அவன் உண்டு. அவள் உண்டு. அது வேறு. அவை வேறு. அவன் வேறு. அவள் வேறு. அவர்கள் வேறு. இந்த வாக்கியங்களைப் படித்துப்பார். இல்லை, உண்டு, வேறு என்ற சொற்களை எங்கும் பயமில்லாமல் உபயோகிக்கலாம்.

(3) கீழ்வரும் வாக்கியங்களிலிருந்து பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் கண்டுபிடி :—

1. குயில் குஞ்சு பொரிப்பது இல்லை.
2. பெண் காகம் கூடு கட்டும்.
3. விஜயாள் பந்து ஆடுகிறாள்.
4. காகத்துக்கு இரண்டு கண்கள் உண்டு.
5. நாயும் பூனையும் சண்டை யிடுகின்றன.
6. கண்ணன் பள்ளிக்கூடம் போகிறான்.

(4) சேர்த்து எழுது :—

| | | | | |
|---|---|---|---|---|
| கண்டதை | + | தின்னும் | = | கண்டதைத் தின்னும் |
| மகனை | + | கண்டாள் | = | |
| கதவை | + | தட்டு | = | |
| என்னை | + | பார்த்தான் | = | |
| குழந்தைக்கு | + | பால் | = | குழந்தைக்குப் பால் |
| காப்பிக்கு | + | சர்க்கரை | = | |
| வீட்டுக்கு | + | போனார் | = | |
| குதிரைக்கு | + | புல்போடு | = | |

# 17. முத்து வேலைக்குப் போதல்

| | |
|---|---|
| பாரி கம்பெனி | ஓய்வு |
| டெலிபோன் | போய்விட்டார் |
| திரும்பினான் | நெஞ்சுதுடியறி கருவி |
| தயவுசெய்து | பிஸ்கோத்து |

சுந்தரமூர்த்தி பிள்ளை பாரி கம்பெனியில் உதவி மானேஜர் வேலை பார்த்துவந்தார். ஒருநாள் அவர் ஜுரமாய்ப் படுத்துக் கொண்டார் அவருடைய மகனுக்கு ஆறு வயது. அவன் பெயர் முத்து என்பது. அவன் டெலிபோன் வைத்திருந்த இடத்துக்குப்போய் 5172 என்று ஐந்தை முதலாவதும் ஒன்றை இரண்டாவதும் ஏழை மூன்றாவதும் இரண்டை நான்காவதும் திருப்பினான். உடனே அவன் டெலிபோன் குழாவைக் காதில் வைத்துக்கொண்டு, "டாக்டர் ஐயா, எங்கள் அப்பாவுக்கு ஜுரம். தாங்கள் தயவு செய்து சீக்கிரம் வரவேண்டும், ஸார்" என்று மருத்துவரை வேண்டிக் கொண்டான்.



வைத்தியர் மோட்டாரில் வந்து நெஞ்சு துடியறி கருவியை வைத்துப்பார்த்து, "ஒன்றுமில்லை. இதோ, மருந்து எழுதிக்கொடுக்கிறேன். இரண்டுநாள் விடு

முறை வாங்கிக்கொண்டு ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லிப் போய்விட்டார்.

சுந்தரமூர்த்தி பிள்ளை, "உத்தியோகசாலைக்குப் போய் நான் வரமாட்டேன் என்று யார் சொல்வது?" என்று பேசிக்கொண்டார். முத்து, "அப்பா, நான் போய்ச் சொல்லுகிறேன். வருத்தப்படவேண்டியதில்லை. நீங்கள் படுத்துக்கொள்ளுங்கள்" என்றான்.



முத்து உடனே சொக்காய் போட்டுக்கொண்டு தலைப்பாகை மாட்டிக்கொண்டு மோட்டாரில் ஏறிக்கொண்டு அப்பாவின் உத்தியோகசாலைக்குப் புறப்பட்டான்.

வண்டி பாரி கம்பெனியண்டை வந்து நின்றது. முத்து கதவைத் திறந்து வண்டியைவிட்டு இறங்கிப்



பெரிய மானேஜரிடம் போனான்; போய், "நமஸ்காரம் ஸார். எங்கள் அப்பா ஜுரமாய் இருக்கிறார். அவர் வரமுடியாது. நான் அவர் வேலையைச் செய்ய வந்திருக்கிறேன், ஸார்" என்றான்.

துரை, முத்துவைப் பார்த்துத் "தம்பி, நல்லது. மிகவும் சந்தோஷம். இதோ பிஸ்கோத்துப்

பெட்டி. நீ வீட்டுக்குப் போ. அப்பா சௌக்கியமான பின்பு வரட்டும். வந்தனம்" என்று சொன்னுர்.

முத்து சந்தோஷமாய்ப் பிஸ்கோத்துப் பெட்டியை எடுத்துக்கொண்டு வீடுவந்துசேர்ந்து, "அப்பா, நீங்கள் வேலைக்குச் சீக்கிரம்போகும் சமாச்சாரம் தெரியும். துரை தினந்தோறும் பிஸ்கோத்து கொடுக்கிருர். பள்ளிக்கூடத்தில் தினந்தோறும் பிஸ்கோத்துக் கொடுத்தால் நான் முன்னமே போய்விடுவேனே" என்ருன். அம்மாவுக்குச் சந்தோஷமாகி விட்டது. அப்பாவுக்கு ஜுரமும் இறங்கிவிட்டது.

பயிற்சி

(1) முத்து வேலைக்குப்போன கதையை ஐந்து வாக்கியங்களில் எழுது.

(2) தயவுசெய்து, பெரிய, சிறிய, சௌக்கியம்——இந்த வார்த்தைகளை வைத்து ஒவ்வொரு வாக்கியம் எழுது.

(3) இராமன், "நான் வரவில்லை. நாளைக்கு வருவேன்" என்ருன்.

நான் வரவில்லை, நாளைக்கு வருவேன்.——என்ற இரண்டு வாக்கியங்களுக்கு முதலெழுத்தின் மேலும் கடைசி எழுத்தின் பின்னும் " " இந்தக்குறி இருப்பதைப் பார். இந்த அடையாளம் நேர்முகப் பேச்சு அடையாளம்.

முத்து, டாக்டர், டாக்டர், எங்கள் அப்பாவுக்கு ஜுரம். சீக்கிரம் வாருங்கள் என்ருன்.——இந்த வாக்கியத்திற்கு நேர்முகப்பேச்சுக்குறி போடு.



# 18. பயிர்த் தொழில்

| | | |
|---|---|---|
| சாகுபடி | கோடைக்காலம் | முளை |
| ஜீவனம் | புழுதி | பசுமை |
| கலப்பை | மழைக்காலம் | பயிர்கள் |
| மண்வெட்டி | ஆறுகள் | தெளிப்பார் |
| அரிவாள் | குளங்கள் | நாற்றங்கால் |
| பரம்புச்சட்டம் | சேறு | முதிர்ந்து |
| நன்செய் | மூங்கில் | எள்ளு |
| புன்செய் | ஊற | கொள்ளு |
| சோளம் | குடியானவன் | கருவிகள் |

நீங்கள் இரண்டாம் பாடப் புத்தகத்தில் குடியானவனைப்பற்றி வாசித்திருக்கிறீர்களல்லவா ? இனி அவன் செய்யவேண்டிய வேலைகளையும், அவனுக்கு வேண்டிய கருவிகளையும்பற்றிக் கவனிப்போம். பயிர்த்தொழில் என்பதற்கு நிலத்தை உழுது சாகுபடி செய்தல் என்று பொருள்படும்.

பயிர்த்தொழில் செய்து ஜீவனம் செய்கிறவனுக்கு முக்கியமாக வேண்டிய கருவிகள் நிலம், மாடு, கலப்பை, மண்வெட்டி, அரிவாள், பரம்புச்சட்டம் முதலியவைகளேயாகும். நிலம் நன்செய், புன்செய் என இருவகைப்படும். நன்செய் நிலங்களே நெல், கரும்பு, சோளம், வாழை முதலியவைகள் பயிரிடுவதற்கு ஏற்ற நிலமாகும்.

நன்செய் நிலங்களைக் கோடைக்காலத்திலேயே நன்ருக உழுது புழுதியாக்கிவைத்துக்கொள்ள வேண்டும். பிறகு மழைக்காலத்தில் ஆறுகளிலாவது குளங்களிலாவது தண்ணீர் வந்தவுடன் நிலத்திற்குத் தண்ணீர் பாய்ச்சி மறுபடியும் உழுது சேருக்க வேண்டும். நிலம், மேடுபள்ள மில்லாமல் சமமாய் இராது. ஆகையால் சேருக்கின பிறகு பரம்புச் சட்டம் என்ற கருவியினுல் மேடு பள்ளமில்லாமல் சீர்திருத்த வேண்டும்.

இவ்வாறு செய்த பிறகு குடியானவன் விதைக்காக வைத்திருக்கும் நெல்லை எடுத்து மூங்கில் கூடைகளிலாவது சாக்குகளிலாவது போட்டுத் தண்ணீரில் ஊறப்போடுவான். அவற்றிலிருந்து இரண்டு மூன்று தினங்களில் முளை வெளியே வரும். பிறகு முளையை அவன் வயல்களுக்குக் கொண்டுபோய் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாய்த் தெளிப்பான்.

பிறகு, வயலில் உள்ள தண்ணீரை வெளியே திறந்து விடவேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால்

முளைகள் அழுகிப்போகும். சில தினங்களுக்குள் அவை பசுமை நிறமாகக் காணப்படும். அவற்றிற்குக் காலந் தவறுமல் தண்ணீர் பாய்ச்சி, களை எடுக்க வேண்டும். இவ்வாறு செய்து வந்தால் பயிர்கள் முதிர்ந்து நல்ல பலனைக் கொடுக்கும்.

சிலர் வயல்களில் விதைகளைத் தெளிப்பதில்லை. கொஞ்சம் தண்ணீர் வந்தவுடன் நிலத்தில் ஒரு பக்கத்தை உழுது அதில் நிரம்பப் பயிர் முளைக்கும் படி அதிக விதையைத் தெளிப்பார்கள். அவைகள் வளர்ந்து நாற்ருகும்.

குடியானவர்கள் முன் கூறப்பட்டபடி நிலத்தை நன்ருகப் பண்படுத்திக் கொள்ளுவார்கள்; பிறகு, நாற்றங்காலிலே உள்ள பயிர்களைப் பிடுங்கி வயல்களில் நடுவார்கள். நாற்றங்காலிலே உள்ள பயிர்களை நாற்பது நாட்களுக்குள் பிடுங்கவேண்டும்; இல்லாவிட்டால் அவை முதிர்ந்துபோகும்.

வயல்களுக்கு எப்பொழுதும் தண்ணீர் பாய்ந்து கொண்டே இருக்கவேண்டும். தண்ணீர் பாயமுடியாத மேட்டிலே உள்ள நிலத்துக்குத்தான் புன்செய் நிலம் என்பது பெயர். அதற்குத் தண்ணீர் பாய்ச்ச வேண்டியதில்லை. அடிக்கடி மழை பெய்வதனுலேயே அதில் உள்ள பயிர்கள் விளைந்துபோகும்.

புன்செய்களில் எள்ளு, கொள்ளு, துவரை, உளுந்து, கடலை முதலியவைகளைப் பயிரிடலாம்.

## கேள்விகள்

(1) பயிர்த்தொழிலுக்கு வேண்டிய முக்கியமான கருவிகள் எவை?

(2) நன்செய்த்தானியங்கள் எவை? புன்செய்த் தானியங்கள் எவை?

(3) விதை எப்படி விதைக்கப்படும்?

(4) களை பிடுங்குதல் என்றால் என்ன?

## எதிர் வார்த்தை

நன்செய் × புன்செய்
மேடு × பள்ளம்

## பயிற்சி

(1) சேர்த்து எழுது :—

புழுதி + ஆக்கி = புழுதியாக்கி
வாழை + இலை =
மாதிரி + ஆய் =
களை + எடுத்தல்
மா + இலை = மாவிலை
வந்த + உடன் =
தெரிய + இல்லை =
வர + இருந்தான் =

(2) சேர்த்து எழுது :—

கோடை + காலம் = கோடைக்காலம்
மழை + காலம் =

# 19. நெற் பயிர்

| | | |
|---|---|---|
| இல்லம் | வித்து | சீர் |
| மறை | திறல் | முடி |
| பேர் | வணிகர் | பெருநிதி |
| திரு | இசை | காராளர் |

ஏரும் இரண்டுளதாய் இல்லத்தில் வித்துளதாய்
நீர்அருகே சேர்ந்த நிலமுளதாய் - ஊரருகே
சென்று வரஎளிதாய் செய்வாரும் சொல்கேட்கில்
என்றும் உழவே இனிது.

சீர்வளரும் மறைவளரும் ;
திறல்வேந்தர் முடிவளரும் ;
பேர்வளரும் ; வணிகருக்குப்
பெருநிதியம் மிகவளரும் ;
ஏர்வளரும் ; திருவளரும் ;
இசைவளரும் ; கடல்சூழ்ந்த
பார்வளரும் ; காராளர்
பயிர்வளருந் திறத்தாலே.

| | | | |
|---|---|---|---|
| சீர் | = சிறப்பு | மறை | = வேதம் |
| திறல் | = வல்லமை | பேர் | = புகழ் |
| நிதியம் | = செல்வம் | ஏர் | = அழகு |
| பார் | = பூமி | காராளர் | = வேளாளர் |

திறத்தாலே = தன்மையாலே

கேள்விகள்

(1) எப்படி இருந்தால் உழவுத்தொழில் இனிதாகும் ?
(2) பயிர் வளரும் திறத்தால் எவையெல்லாம் வளரும் ?

பயிற்சி

(1) முதல் பாட்டைச் சேர்த்தெழுது.

(2) பிரித்தெழுது :—

| | | |
|---|---|---|
| நெற்பயிர் | = | நெல் + பயிர் |
| கற்சட்டி | = | |
| பற்பொடி | = | |
| கற்பலகை | = | |
| நற்குணம் | = | |
| பிற்பகல் | = | |
| விற்போர் | = | |
| மற்போர் | = | |
| சொற்சாதுரியம் | = | |
| மேற்கோள் | = | |

# 23. கிறிஸ்து ஜயந்தி

| | | |
|---|---|---|
| கிறிஸ்து ஜயந்தி | அதற்கு | தேவதூதர்கள் |
| திருநாள் | ஒவ்வொருவரும் | சமாதானம் |
| கிறிஸ்துநாதர் | சத்திரம் | கிறிஸ்தவர்கள் |
| அவதாரம் | மாட்டுத்தொழுவம் | குடும்பத்தினர் |
| பெத்தலகேம் | பூரணகர்ப்பவதி | யாசகர்கள் |
| ஒன்றுகூடுவர் | அணிவார்கள் | ஏழைகள் |
| சுற்றத்தார் | பணக்காரர் | வாழ்த்துக்கடிதம் |
| கோயில் | வாழ்த்து | தப்பானமுறை |
| ஏறக்குறைய | தொண்ணூற்றைம்பது | காகிதப்பூக்கள் |

கிறிஸ்து அவதாரம் செய்தநாளே கிறிஸ்து ஜயந்திநாள். இந்தத் திருநாள் உலகம் எங்கும் கிறிஸ்தவர்களால் கொண்டாடப்படுகிறது. இந்தப் பண்டிகை கிறிஸ்தவர்களுக்கு மிகவும் முக்கியமான பண்டிகை. இது ஆண்டுதோறும் டிசம்பர் மாதம் இருபத்தைந்தாம் தேதி வருகிறது.

இதைப்பற்றித் தெரிந்துகொள்வதற்குமுன் கிறிஸ்துநாதர் அவதாரம்செய்ததைப்பற்றித்தெரிந்து கொள்ளவேண்டும். அரேபியாவில் பாலஸ்தீனம் என்னும் நாடு இருக்கிறது. அந்த நாட்டில் நாசரேத் என்ற பட்டணம் உண்டு. அந்தப் பட்டணத்தில் யோசேப்பு என்பவர் தச்சுவேலைசெய்து வாழ்ந்து வந்தார். அவருடைய மனைவியார் மேரி அம்மையார். யோசேப்புக்குச் சொந்த ஊர் பெத்தலகேம். அந்தக் காலத்தில் குடிமதிப்பு எடுப்பதாயிருந்தால் அவரவர் கள் தங்கள்தங்கள் சொந்த ஊருக்குப்போய் ஜனத்

தொகையில் தங்கள்தங்கள் பெயரைப் பதிவுசெய்து கொள்வது வழக்கம். அதற்காக யோசேப்பும் தம்முடைய கர்ப்பவதியாயிருந்த மேரியம்மையாரை அழைத்துக்கொண்டு பெத்தலகேம் போனுர். குடிமதிப்புக் கணக்குக்கொடுக்க வேறுமக்களும் அங்குப் போயிருந்தார்கள். ஒருவருக்கும் தங்க இடம் கிடைப்பது அரிதாயிருந்தது. யோசேப்புக்கு அவ்வூரில் ஒரு சத்திரத்தின் மாட்டுத்தொழுவத்தில்தான் இடம் கிடைத்தது. பூரண கர்ப்பவதியாயிருந்த மேரி அம்மையார் அந்த இடத்தில்தான் யேசு பாலகரைப் பெற்றெடுத்தார். தேவபாலகன் அவதாரம் செய்த காலத்தில் தேவதூதர்கள் வானத்திலிருந்து, "உலகத்தில் நல்லெண்ணமும் சமாதானமும் நிலைப்பதாக" என்று வாழ்த்தினுர்கள்.

கிறிஸ்தவர்கள் கிறிஸ்துநாதர் அவதரித்தநாளைத் தான் ஒவ்வொரு வருஷமும் டிசம்பர்மாதம் இருபத்தைந்தாம்தேதி கொண்டாடுகிருர்கள். அவர்கள் அன்றையதினம் தங்கள் வீடுகளை பலவிதவர்ணமுடைய காகிதப் பூக்களால் அலங்காரம் செய்வார்கள். வெவ்வேறு இடங்களில் உள்ள குடும்பத்தினர் ஒன்று கூடுவர். பணக்காரர்களும் ஏழைகளும் புது உடை வாங்கி அணிவார்கள். கிறிஸ்து ஜயந்தியன்று அவர்கள் கோயிலுக்குப் போய்க் கடவுளை வணங்கி வீட்டுக்கு வந்து தங்கள் நண்பர்களோடும் சுற்றத்தாரோடும் விருந்து உண்டு மகிழ்வார்கள். சிலர் ஏழைகளுக்கு

அன்னதானம் செய்வதுண்டு. வேறு சிலர் யாசகர்களுக்குத் தருமம் செய்வது வழக்கம்.



கிறிஸ்மஸ் மாலையில் சிலர் தங்கள் வீடுகளில் ஒரு கிளையை நட்டு அதில் பொம்மைகளையும் மிட்டாய்ப் பொட்டலங்களையும் கட்டிவைப்பர். இதற்குக் கிறிஸ்மஸ் மரம் என்பது பெயர். சிறுவர்கள் இம் மரத்தைச்சுற்றி நின்று தங்களுக்கு அந்த விருப்பமானதை மரத்திலிருந்து அறுத்துக்கொள்வார்கள்.

கிறிஸ்மஸ் அன்று அவர்கள் ஒருவரை ஒருவர் வாழ்த்திக்கொள்வார்கள். ஒருவருக்கு ஒருவர் கிறிஸ்மஸ் வாழ்த்துக் கடிதங்களை அனுப்பிக்கொள்வதும்

உண்டு. இப்படி வாழ்த்துக் கடிதம் அனுப்பும் வழக்கம் ஏறக்குறைய தொண்ணூற்றைந்து ஆண்டுகளுக்கு முன்புதான் வந்ததாம்.

சிலர் அன்று கிறிஸ்துநாதர் அவதரித்த காலத்தில் தேவதூதர்கள் சொன்னபடி பகைமை இல்லாமல் அன்போடுவாழச் சண்டை போட்டவர்களிடத்திலும் சமாதானம் செய்துகொள்வது முண்டு. சிலர் இதைத் தப்பானமுறையில் கொண்டாடுகிருர்கள். அப்படிச்செய்யாமல் இத்திருநாளை நல் முறையில் கொண்டாடுவது சிறந்தது.

கேள்விகள்

(1) நீ உன் வீட்டில் கிறிஸ்து ஜயந்தி கொண்டாடியதுபோல் பத்து வாக்கியங்கள் எழுது.

(2) கிறிஸ்து அவதாரம் செய்தவரலாற்றைப் பற்றி இரண்டு வாக்கியங்கள் எழுது.

பயிற்சி

(1) ஒன்றுகூடுவர், அவதரித்தார், கொண்டாடுகிருர்கள், ஏறக்குறைய — இச்சொற்களை வாக்கியத்தில் அமைத்து எழுது.

(2) சந்திசேர்த்தெழுது:

இருபத்து + ஐந்து = இருபத்தைந்து
அதற்கு + ஆக =
ஒருவருக்கு + ஒருவர் =
பெற்று + எடுத்தார் =
ஆண்டு + ஆண்டு
செய்வது + உண்டு
செலவு + ஆயிற்று
கொள்வது + உண்டு

(3) கீழ் வருபவைகளில் கோடிட்ட இடத்தில் ஏற்றசொல் போட்டெழுது.

(1) நான் என் மாமனுரைப் ——. (பார்ப்பான், பார்ப்பேன்.)

(2) நீ எப்படி ——. (வந்தான், வந்தாய்.)

(3) நாங்கள் நேற்று ————. (போனீர், போனேம்.)

(4) நீங்கள் என்ன ————. (செய்கிருர்கள், செய்கிறீர்கள்.)

(5) அவன் பாடம் ——. (படிக்கிருள், படிக்கிருன், படிக்கிருர்.)

(6) சீதை பூ ———. (கட்டுகிருர், கட்டுகிறது, கட்டுகிருள்.)

(7) பெண்களும் ஆண்களும் அங்கு——. (வந்தாள், வந்தார், வந்தன.)

(8) ஔவையார் நல்வழி ————. (எழுதினுள், எழுதினுர் எழுதினது.)

(4) முற்றுப் புள்ளி ஏன் போடவேண்டும்?

(5) கீழ்க்கண்ட பாராவில் முற்றுப்புள்ளி வரவேண்டிய இடங்களும் முற்றுப்புள்ளியும், வினு வரவேண்டிய இடத்தில் வினுவும் போட்டு எழுது.

நாம் எல்லா உயிர்களிடத்திலும் அன்பாயிருத்தல் வேண்டும் நம்மைப்போல் அவைகளை நினைக்கவேண்டியதில்லையா வாய் இல்லாப் பிராணிகளை வதைக்கலாமா நமக்காவது பேசுந்திறமை இருக்கிறது. நாம் எதையும் கேட்டு உண்கிறேம் பிராணிகள் என்ன செய்யும் கன்றுக்குட்டியைப் பால் குடிக்க விடாதிருப்பது அநியாயமல்லவோ நாம் அப்படிச்செய்தல் கூடாது நாம் எல்லா உயிர்களிடத்திலும் அன்பாயிருத்தல்வேண்டும்.

பயிற்சி



இப்படங்களைப் பார்த்துக் கதை அமைத்து எழுது.

# 21. திரும்பி வந்தான்

## காட்சி 1

இடம் —திருநெல்வேலி
காலம் —பகற் காலம்
நடிகர்கள் —தகப்பன்
மகன்

(தகப்பனுர், கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்திருக்கிறுர். இளைய மகன் அழகப்பன் தகப்பனிடத்தில் பேசுகிறுன்.)

**தகப்பனுர்:** வேண்டியதில்லை என்றுல் கேட்காமலிருக்கிருய். கொடுப்பதற்கு ஒன்றும் தடை இல்லை. நீ கஷ்டப்படவேண்டுமே என்று தான் வருந்துகிறேன்.

**அழகப்பன்:** என்னுல் இந்த வீட்டில் இனிமேல் இருக்க முடியாது. பங்கு பிரித்துக் கொடுத்து விடுங்கள். நான் எப்படிப்போனுல் உங்களுக்கு என்ன?

**தகப்பன்:** மூத்தோர் சொல் வார்த்தை அமுதம். தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை. கெடுமதி இருந்தால் சொல்வதைக் கேட்க முடியுமா? யானை வரும் பின்னே மணியோசைவரும் முன்னே. எங்கும் போகவே வேண்டியதில்லை. அப்பா, சொல்வதைக் கேள்.

**அழகப்பன்:** முடியவே முடியாது. பங்கு தீர்த்துக் கொடுத்துவிடுங்கள்.

**தகப்பன்:** நாளைக்குச் செய்துவிடுகிறேன்.

(தந்தை பங்கிட்டுக் கொடுக்கிறான்; எல்லோரும் பிரிகிறார்கள்.)

காட்சி 2

இடம் — இரங்கூன்

காலம்—மாலை

நடிகர்கள்—வேலைக்காரன் ரங்கன், சுப்பன், வெங்கடராமன்.

**அழகப்பன்:** அடே, ரங்கா, சினிமா போகவேண்டும். மோட்டார் வரச் சொல்.

**ரங்கன்:** அதிக வாடகை கேட்பார்களே, ஐயா.

**அழகப்பன்:** கவலை இல்லை. கொண்டுவா. அடே! திண்டு சுப்பனையும் வெங்கடராம அய்யரையும் அழைத்துக்கொண்டுவா.

(ரங்கன் அழைத்துக்கொண்டு வருகிறான்.)

அடே, ரங்கா! ஓவல்டின் போட்டுக்கொண்டுவா. பெரிய ஹோட்டலிலிருந்து பலகாரம் வந்தாய் விட்டதோ?

**ரங்கன்:** வந்துவிட்டது. இதோ கொண்டுவந்தேன்.

(அழகப்பன் நண்பர்களுடன் சாப்பிடுகிறான். சினிமாவுக்குப் போகிறான்.)

காட்சி 3

காலம் — காலை

நடிகர்கள் — வீட்டுக்காரன், வெங்கடராமன் சுப்பன்.

**வீட்டுக்காரன்:** குடிக்கூலி கொடுக்கவில்லை. சாமான்களை எடுப்பேன்.

அழகப்பன்: அடே, வெங்கிட்டு முப்பது ரூபாய் தயவுசெய்து கொடு. சாமான் விற்றுக் கொடுக்கிறேன்.

வெங்கடராமன்: என் இடத்தில் ஏது?

ஓய், சுப்பு, நீதான் ஐந்து ரூபாய் கொடு. அழகப்பன் சாமான் விற்றுக்கொடுப்பான்.

சுப்பன்: செம்பால் அடித்த காசு கூட என் கையில் இல்லை.

(நண்பர்கள் நின்றுவிட்டார்கள். வேலைக்காரனும் ஓடிவிட்டான். வீட்டுக்காரன் வழக்குத் தொடுத்துச் சாமான்களை ஏலம் போட்டுக் குடிக்கூலிக்கு வழி தேடிக்கொண்டான்.)

## காட்சி 4.

## மரத்தடியில்

(தனிச்சொல்)

அழகப்பன்: ஹா, தெய்வமே! கையில் காசும் இல்லை. கடன் கொடுப்பார் யாரும் இல்லை. ஊரிலே காணி இல்லை. உறவு ஒருவர் இல்லை. என்ன செய்வேன்! பல் எலாம் தெரியக் காட்டிப் பிச்சை எடுக்க மனம் வரவில்லையே. ஐயோ பசி எடுக்கிறதே. பசிதாங்க முடியவில்லையே!

(வெங்கடராமன் வீட்டுக்குப் போகிறான்.)

வெங்கடராமா, இரண்டு நாளாகச் சாப்பிடவில்லை.

வெங்கடராமன்—ஐயோ இப்போதுதான் சாப்பிட்டாய்விட்டதே; பாவம்! என்ன செய்வது!

(பர்மாக்காரன் ரொட்டி வாங்கிக் கொடுக்கிறான்)

காட்சி 5

இடம் —தெரு

நடிகர்கள்—தெருப்போக்கர்கள்

(வழியில் அழகப்பன் போகிறுன்.)

முதல்மனிதன்: அடடா, இவன் இருந்த இருப்பு என்ன? இப்போது இருக்கும் நிலைமை என்ன? அப்பப்பா! மோட்டார் என்ன! வேலைக்காரர் என்ன! இவ்வளவுதானு?

இரண்டாம்மனிதன்: வளவனுயினும் அளவறிந்து உண்ணவேண்டும். அவ்வை சொன்னது தெரியாதா?

ஆன முதலில் அதிகம் செலவானல்
மானம் அழிந்து மதிகெட்டுப்-போனதிசை
எல்லார்க்கும் பொல்லனய் ஏழ்பிறப்பும் தீயனய்
நல்லார்க்கும் பொல்லனும் நாடு.

அளவுக்கு மிஞ்சிச் செலவு செய்தால் இதுதான் கதி.

(இருவரும் போகிறுர்கள்.)

காட்சி 6

இடம் —மரத்தடி

நடிகர்கள்—மாணவர்கள், கண்ணுசாமி, அழகப்பன்.

(அழகப்பன் தன் வீடு இருக்கும் திசைநோக்கி வாடிய முகத்துடன் தனியாகப்பேசுதல்.)

அழகப்பன்: ஹா, தெய்வமே! எனக்குச் சரியான தண்டனை. என் தகப்பனர் வீட்டில் எத்தனையோ

ஆட்கள்வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு வயிறார உணவு கிடைக்கிறது. நான் இங்குப் பசியால் வாடுகிறேன். யாராவது கப்பலுக்குப் பணம் கொடுத்தால்போதும். நான் வீடுபோய் அப்பா காலில் விழுந்து மன்னிப்புக் கேட்பேன், கூலியாளாக வைத்துக் கொள்ள வேண்டுவேன். இங்குச் சாவதை விட அவர் காலடியில் சாவேன்.

(மாணவர்களைப்பார்த்து வருகிறான்.)

**கண்ணுசாமி:** என்ன ஐயா, வேண்டும்?

**அழகப்பன்:** தம்பி, நான் இருப்பது திருநெல்வேலி. இங்கு வந்தேன். தப்பான வழிகளில் பொருளைச் செலவு செய்துவிட்டேன். கையில் ஒருகாசும் இல்லை. சாப்பாடும் கிடைக்கவில்லை. எத்தனையோ பேர்களைக் கேட்டேன். அவர்கள் வாயில் வந்ததைப் பேசுகிறார்கள். யாராவது சிறிது பணம் உதவி செய்தால் ஊருக்குப்போய் விடுவேன்.

**கண்ணுசாமி:** நீ வா. எங்கள் அப்பாவிடம் சொல்லிப் பார்க்கிறேன்.

(அழகப்பனும் கண்ணுசாமியும் போகிறார்கள்.)

(கண்ணுசாமி அழகப்பனுக்கு உணவுகொடுக்கிறான்.)

**கிருபாநிதி:** கண்ணு, யார்? என்ன விசேஷம்?

**கண்ணுசாமி:** அப்பா, இவர் ஊரைவிட்டு இங்கு வந்து கெட்ட வழியில் பணம் செலவு

செய்து ஒன்றும் இல்லாமல் கஷ்டப்படுகிருர். இருபத்தைந்து ரூபாய் கடன் கொடுத்தால் போதும். திருப்பி அனுப்புகிருராம்.

காட்சி 7

இடம்-திருநெல்வேலி
காலம்-பகல்
நடிகர்கள்-அழகப்பன், தந்தை முதலியோர்

வேலைக்காரன்: ஐயா! போனவர் திரும்பிவந்தார்; கோயிலருகில் நிற்கிருர், ஐயா, பார்த்தேன். விசாரித்தேன். வெட்கப்படுகிருர்.

(தந்தை அழைக்க அழகப்பன் வீடு போகிருன்.)

தந்தை: அழகப்பா, திரும்பி வந்தாயா? வீட்டுக்கு வா.

அழகப்பன்: தந்தையின் காலில் விழுந்து அப்பா, மன்னிக்க வேண்டும். உங்களுக்கும் கடவுளுக்கும் விரோதமாக நடந்தேன். நான் உங்கள் மகனுக இருப்பதற்குச் சிறிதும் தகுதியில்லாதவன். (காலில்விழுகிருன்.)

தந்தை: கவலைப்படவேண்டியதில்லை. வருத்தப்படாதே. நடந்தது நடந்துபோயிற்று.

(வீட்டுக்குப் போகிருர்கள்.)

தந்தை: அழகப்பா, குளித்துவிட்டு வா. சாப்பிடலாம். உனக்காகக் காத்திருக்கிறேன்.

காட்சி **8**

இடம்: வீடு
காலம்-இரவு
நடிகர்கள்-தந்தை முதலியோர்.

(வீடு சிங்காரிக்கப்பட்டிருக்கிறது. உறவினர் வந்திருக்கிறார்கள். கிராமபோன் பாடுகிறது, வெளியில் காலையில் போன மூத்தமகன் வருகிறான்.)

மூத்தமகன்: என்ன விசேஷம்?

தந்தை: உன் தம்பி வந்திருக்கிறான். அதனால் இன்றைக்கு விருந்துவைத்திருக்கிறேன்.

மகன்: ஓடிப்போய் வந்தவனுக்கு, விருந்தா அப்பா, நன்றாய் இருக்கிறதே! உங்கள் சொற்படி நடக்கிறேன், எனக்கு ஒன்றும் இல்லை. ஓடிப்போய் வீண்செலவு செய்தவனுக்காக விருந்தா?

தந்தை: மனம் திரும்பி வந்தவனுக்காகச் சந்தோஷப்படவேண்டுவ தில்லையா? நாம் திரும்பிவந்ததற்காகச் சந்தோஷப்படுவோம்!

(எல்லாரும் மகிழ்ச்சியடைகிறார்கள்.)

## பொதுக் கடவுள் வணக்கம்

1. இம்மைஎம் தலைவனாக
   இருப்பதால் தாழ்ச்சி இல்லை.
அம்மையே, அப்பா, எங்கள்
   அருங்கலை நாளும் ஓங்க,
செம்மைநல் வழியில் நின்று
   செப்பருந் தொண்டில் ஓங்க,
எம்மையா ளுடைய ஈசா,
   எமக்குநீ அருளல் வேண்டும்.

2. எம்மருங் கல்விச் சாலை
   எழிலுற நாளும் ஓங்க,
இம்மகிதலத்தில் எங்கும்
   இருந்திடுஞ் சாலை ஓங்க,
எம்மரு நாடு பன்னாள்
   எண்ணிய எண்ணம் ஓங்க,
இம்பரில் இன்பம் ஓங்க,
   இறைவ, நீ அருளல் வேண்டும்.

—அ. கி. பரந்தாமனார்




## என் தாயே

(1) என்னைப் பெற்ற என்தாயே,
என்னை வளர்க்கும் என்தாயே,
உன்னை என்றும் மறவேனே!
உன்னடி என்றும் தொழுவேனே!

(2) என்னைப் பெற்ற என்தாயே,
என்னுயிர் அளித்த என்தாயே,
உன்னை என்றும் மறவேனே!
உன்சொற் படிநான் நடப்பேனே!

(3) என்னைப் பெற்ற என்தாயே,
எனக்கே வாழும் என்தாயே,
உன்னை என்றும் மறவேனே!
உனக்குப் புகழ்வர வாழ்வேனே!

## பைசைக்கிள்

1. தங்கையே பார் தங்கையே பார்.
ஸைக்கிள் வண்டி இதுவே பார்.

2. சிங்கார மானவண்டி
சீமையிலே செய்த வண்டி.

3. இரும்பாலே செய்த வண்டி
எங்கெங்கும் ஓடும் வண்டி.

4. மாடில்லை குதிரை யில்லை
மாயமதாய்ப் பறந்திடும் பார்.

5. தீயில்லை புகையு மில்லை
தீவிரமாய்ச் சென்றிடும் பார்.

6. காலாலே மிதிப்பதினல்
கடும் விசையில் போயிடும்பார்.

7. ஒன்றின் பின் ஒன்ருக
உருளும்பைதாக்களைப் பார்.

8. அக்காளும் தங்கையும் போல்
அவை போகும் அழகைப்பார்.

— சி. தேசிக விநாயகம்பிள்ளை

## பஞ்சவர்ணக் கிளி

(1) பஞ்ச வர்ணக் கிளியே,—நீ
பறந்து வா என்னருகே.
அஞ்சி ஒளிவதேனோ?—நாம்
அன்பு செய்து கொள்வோம்.

(2) அந்த வேப்ப நிழலில்—நீ
அணிலினோடு பேசும்
சொந்த விஷயம் ஏதோ?—உன்
தொடர்பு வேண்டுகின்றேன்.

(3) பவள வாயும் காலும்—உன்
பசுமை அணியும் கண்டால்
அவிழும் உதய மலர்போல்—என்
அகமலர்ந்து கொள்ளும்.

(4) கவலை அற்ற முகமும்—வீண்
கபடம் அற்ற நடையும்
உவகை பொங்கு தெளிவும்—நீ
உற்ற தெங்குக் கிளியே?.

(5) பச்சை இலையின் நடுவே—நீ
பதுங்கி அலைய வேண்டா.
இச்சை போலத் திரிவோம்—நம்
எண்ணம் ஒன்று தானே.

(6) முடிவிலாத குரலில்—இம்
முடிவு கட்டி விடுவோம்
அடிமை இல்லை யார்க்கும்—நாம்
அடிமை இல்லை என்றே.

— நாராயணன்

## தேவாரம்

### திருஞானசம்பந்தர்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான்
[திருநீறே.

### திருநாவுக்கரசர்

(1) தலையே நீ வணங்காய்—தலை
மாலை தலைக் கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய்.

(2) நெஞ்சே நீ நினையாய்—நிமிர்
புன்சடை நின்மலனை
மஞ்சா டும்மலை மங்கை மணாளனை
நெஞ்சே நீ நினையாய்.

### சுந்தரர்

பொன்னார் மேனியனே புலித்தோலை யரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
யன்னே யுன்னையல்லா லினியாரை நினைக்கேனே.

### மாணிக்கவாசகர்

முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமல மறிவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

அகவல்

செய்ய வார்சடைத் தெய்வ சிகாமணி
பாதம் போற்றும் வாதவூர் அன்ப!
பாவெனப் படுவதுன் பாட்டு
பூவெனப் படுவது பொறிவாழ் பூவே!

திருப்புகழ்

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணசலம் அமர்ந்த பெருமாளே.

# குதிரை போகும்வேகம்

## (தேசிங்குராஜன் குதிரை)

காடு மலைகள் செடிகள் எல்லாம்
கலங்கி நடுங்கிடவே,

மலைகள் இடிந்து தவிடு பொடியாய்
மண்மேல் விழுந்திடவே,

குன்று மலைகள் தாண்டிக் குதிரை
குதித்தேறிப் போகிறதாம்.

குன்றுகள் எல்லாம் பொடிப் பொடியாகக்
குலுங்க விழுந்தன பார்.

குதிரை போகும் வேகத்தாலே
குன்று மலைகள் எல்லாம்

குப்பென்று ஐங்காத வழியும்
கொண்டு போகுது பார்.

ஆறுகுளங்கள் மடுக்கள் எல்லாம்
அதிக நடுங்குதல் பார்.

குதிரை தாண்டின வேகத்தாலே
குழந்தை தேசிங்கு

குலுங்க நகைத்துச் சிமிட்டா கொடுத்தான்
குதிரைக் காலுலும்

நிமிஷநாழிகைக்கு ஐந்நூறு காதம்
நிலையாய்ப் பறக்குது பார்.

# கொன்றைவேந்தன்

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.
ஏவாமக்கள் மூவா மருந்து.
ஔவியம் பேசுதல் ஆக்கத்திற் கழிவு.
கிட்டா தாயின் வெட்டன மற.
கீழோ ராயினும் தாழ வுரை.
குற்றம் பார்க்கிற் சுற்றம் இல்லை.
கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி.
சூதும் வாதும் வேதனை செய்யும்.
சோம்ப ரென்பவர் தேம்பித் திரிவர்.
தந்தை சொல்மிக்க மந்திரமில்லை.
தாய் சொல் துறந்தால் வாசகமில்லை
திரைகட லோடியும் திரவியம் தேடு.
தேடா தழிக்கின் பாடாய் முடியும்.
தீராக் கோபம் போராய் முடியும்.
நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை.
நுண்ணிய கருமமும் எண்ணித் துணி.
பாலோ டாயினுங் காலமறிந் துண்.
பொல்லாங் கென்பவை எல்லாம் தவிர்.
முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்.
மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்.
தோழ னோடும் ஏழமை பேசேல்.
ஊக்க முடைமை ஆக்கத்திற் கழகு.
நோன் பென்பதுவே கொன்று தின்னாமை.

PRINTED AT THE V. R, PRRSS, MADRAS—1939.

# எமது புதிய தமிழ் புத்தகங்கள்

## பாரதி புதுமுறைத் தமிழ் வாசகம்

A. K. பரந்தாமனர் அவர்கள் இயற்றியது

இப் பாட புத்தகங்கள் சென்னை கல்வி இலாகா புதுத்திட்டத்தை அனுசரித்து எழுதப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| பாரதி புதுமுறைத் தமிழ் வாசகம் | முதல் பாடம் | 0 3 0 |
| ,, | இரண்டாம் பாடம் | 0 4 0 |
| ,, | மூன்றும் பாடம் | 0 5 0 |
| ,, | நான்காம் பாடம் | 0 6 0 |
| ,, | ஐந்தாம் பாடம் | 0 7 0 |

## புதுமுறைச் சிவிக்ஸ்

R. சவரிமுத்து அவர்கள் இயற்றியது

| | | |
|---|---|---|
| புதுமுறைச் சிவிக்ஸ் | முதல் புத்தகம் | 0 5 0 |
| ,, | இரண்டாம் புத்தகம் | 0 6 0 |

## நமது தாய்நாட்டுச் சரித்திரக் கதைகள்

R. ஸ்ரீநிவாசன், M. A., அவர்கள் இயற்றியது

| | | |
|---|---|---|
| நமது தாய்நாட்டுச் சரித்திரம் | முதற் புத்தகம் | 0 4 0 |
| ,, | இரண்டாம் புத்தகம் | 0 5 0 |
| ,, | மூன்றும் புத்தகம் | 0 6 0 |

## புதுமுறை பூகோள சாஸ்திரம்

N. சுப்பாராவ், B. A., L. T., அவர்கள் இயற்றியது

| | |
|---|---|
| புதுமுறைச் சென்னை இராஜதானி பூகோளம் | 0 8 0 |

---

பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்,

பெரம்பூர் பாரக்ஸ் போஸ்டு, சென்னை. | புதுமண்டபம், மதுரை. | திருநெல்வேலி, ஜங்ஷன்.